ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுவருஷம் ஆனிமீ 30உ ( 1936 ஜூலாய் 13 ) திங்கட்கிழமை { இலக்கம்—உஎ

## வெண்பாவில் புகழேந்தி

### பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதியது

கற்புடை மகளிர் பலர் கணவனையே தெய்வமாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பது.

(முற்றொடர்)

"என் காதலிற் பிரிக்கோனல்லன்'. தமயந்தி நீதொடு படேம்சிறமியளல்லள்; அடவிக் கானகத்து ஆயிழை தன்னை இடையிருள் யாமத்து விட்டு நீக்கியது அவர்தம் பண்டைவினையே; எனச் சேரர் சிகாமணி கூறிய மூன்றனையுமே புகழேந்தியாரும் தம் நூலில் மிகச் சிறப்பாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளார். தமயந்தியைக் கானகத்துக் காரிருளிற் கைவிட்டுப் பிரியும் போது நளன் கூறிய

"நீக்காத காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்று ஏகிலன் போற் பிரிகின்றேன்பான்"

எனும் மொழிகள் மிகுந்த நயம் உடையனவாய் மிளிருகின்றன. தம்மோடு கூடி வந்த ஒருவரைக் கானகத்தே காரிருளிற் பாழ் மண்டபத்தில் விட்டுப் பிரிதலென்றால் மிகவும் துக்கத்திற்கிடமான அநீதியான செயலாகும். அற்றுயின் காதலன்புடையாளை அதுவும், ஒருபொழுதும் நீங்காத காதலன்புடையாளை ஒரு காதலன் விட்டுப் பிரிதல் எத்தகையது? இப்பிரிவு நளன் தமயந்தியிடத்துக் கொண்ட வெறுப்பாலும் பிறரொருவரிடத்துக் கொண்ட காதலாலும் ஏற்பட்டதன்று. அவர் தம் பண்டை வினையாற்றான் ஏற்பட்டது.

இன்னும், தமயந்தி நீங்காத காதலன்புடையாள் என்பதை வாளரவின் வாய்ப்பட்ட அமையத்தும் அவ்விடரினின்றும் தன்னை விடுவிக்குமாறு நளனையே வேண்டினமையானும், தெய்வத்தை ஒருகாலும் தொழாமையானும் நளன் நடுக்காட்டில் கள்ளிருளில் விட்டுப் பிரிந்தபொழுது தான் உடுத்திருந்த பாதித் துகிலையே தன் தந்தையின் அரண்மனையிலிருந்த பொழுதும் உடுத்திருந்தமையானும், தன் காதலனைக் காணும் வரையும் நீராடாமலும் அஞ்சனமெழுதாமலும் சந்தனம் அணியாமலும் மலர்களைச் சூடாமலும் அவனை நினைந்து நினைந்து அழுது கொண்டிருந்தமையானும் பிறவற்றானும் அறிந்து கொள்ளலாம்.

தமயந்தி நீதொடுபடும் சிறுமியல்லள்; 'பைந்தொடி நீ என்னுடன் போதுவாய்' என அழைத்த வேடனைச் சிறி விழித்து நீறாக்கினாள். கானகத்து நடுவில் கள்ளிருளில் அருள் சிறிதுமின்றித் தன்னை நீத்த நாயகன் மேல் சிறிதும் சினங்கொள்ளாமல் "முன்னை வினையின் வலியால் முடிமன்னன் என்னைப் பிரிந்தான்" எனக் கூறினள். அரண்மனையில் வாழும் காலத்தும் துன்பசாகரத்தில் அமிழ்ந்தி யிருந்தாள். "கடப்பான், வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த, தனைத்தே விதியின் வலி"

எனத் தம் கற்றுள் கூறியதன்றித் தன்னை நளன் பிரிந்தது 'முன்னை வினையின் வலியாலேயே" எனவும் "மாயம் பல சூழ்ந்து தெய்வப் கெடுத்தால் செயலுண்டோ" எனத் தமயந்தி கூறினளாகவும், "பண்டை வினைப் பயனைப் பாரிடத்திலார் கடப்பார்" எனவும் "பண்டை வினையின் பயனே" எனவும் நளன் கூறினைக்கவும் கூறியிருத்தல் மிகவுஞ் சிறந்தது. கதா நாயகனும் கதா நாயகியும் தங்கள் பிரிவு முன்னை வினையால் நேர்ந்த என எண்ணினார்களெனப் பொருத்திக் காட்டியிருக்கும் சித்திரம் புலவரது புலமையின் உயர்வை நன்கு விளக்குகின்றது.

அறிஞர்களே! இதுபொழுது எம் மனத்தினிடைத்தோன்றிய இருளெண்ணங்களை வெளிப்படுத்தாது செல்ல முடியவில்லை. ஒன்று, நம் தெய்வப் புலவர் தம் தமிழ்வேதத்தில் "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்றோதினர் "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்றார் குமரன் அருட்பெற்ற குமர குருபரரும். கற்பரசிகளின் வரலாறுகளை நாங்கள் நோக்குமிடத்து அவர்கள் இடருற்ற காலத்தும் கடவுளர்களை நினையாது தம் நாயகர்களையே வணங்கினார்கள் என்பதை யறியலாம்.

தமயந்தி அரவின் வாய்ப்பட்ட அமயத்துத் தன் நாயகனைக் குறித்து வேண்டினமையை அறிந்தோம். சீதாபிராட்டியார் இராவணனால் எடுத்துச் செல்லப்பட்ட அமயத்தும், அசோகவனத்தில் சிறையிருந்த அமையத்தும் இராமனையே நினைந்து நினைந்து வருந்தினர். "ஈண்டு யானிருந்தின் னுயிர் மாயினும் மீண்டுவந்து தன் மேனியைத் தீண்டலாவதோர், தீவினை தீர்வரம் வேண்டினள் தொழுதெனறு விளம்புவாய்" என்று நாயகரிடமே வரம் வேண்டினர்.

தொடர்ச்சி 7ம் பக்கல்

---

அதிகாரமில்லையாம்

தொல்புரத்திலுள்ள சிதம்பரம் அம்பலவாணசுவாமி மானுமுதலியார் மடத்தின் அதிகாரிகள் அம்மடத்தில் தாமுதை இருந்து வந்த தொல்புரம் சின்னத்தம்பி பேரம்பலம் [காந்தி] அவர்களைக் குடியெழுப்பும் பொருட்டு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். அவர் தம்மை எழுப்புவதற்கு அவர்களிடம் அதிகாரமில்லையென்று மறுக்கின்றாராம். மற்றும் சிதம்பர மடங்களுக்குரிய நிலங்களை அனுபவிப்பவர்கள் அவ் வழக்கின் முடிவை எதிர்பார்க்கின்றனர்.

—கடித

---

## பாராளுமன்றத்தில் நிகழ்த்தும் சொற்பெருக்கு

### எழுதிப் படிக்கலாகாதென்ற பிரேரணை

### கிராபோர்ட் பிரபு பிரேரித்தார்

பார்லிமெண்டு அங்கத்தினர்கள் தாங்கள் பேச வேண்டியதை முதலிலேயே எழுதிப் பின் பார்லிமெண்டில் வாசிப்பதைக் கண்டித்துப்பிரபுக்கள் சபையில் கிராபோர்ட் பிரபு ஓர் பிரேரணையைக் கொண்டுவந்தார். அவ்வமயம் பேச்சு வன்மையில் கீர்த்திபெற்ற பர்க், ஷெரிடன், லார்ட் செஸ்டர்பீல்ட், ஹிளாஸ்டன் போன்ற பல பிரமுகர்களைப் பற்றிப் பேசப்பட்டது.

இங்கு பேசுகிறவர்களையும் அங்கத்தினர்கள் நன்குகச் செவி கொடுத்துக்கேட்கின்றனர் ஆனால் பிரசங்கங்களை முதலிலேயே எழுதிச் சுலபமாக வாசித்தால் இச்சபையின் மதிப்புக்குறைவதுடன் ஒருவரும் கவனமாகக் கேட்கமாட்டார்கள்.

பிரசங்கங்களை எழுதிப் படிப்பதை இச்சபை அங்கத்தினர்களில் பலர் வெறுக்கின்றனர். பிரசங்கங்களினால் ஓட்டுகள் பாதிக்கப்படுகின்றன. ஆனால் எழுதிப்படிப்பதால் ஒருவருடைய மனமும் மாறிவிட்டது. அங்கத்தினர்கள் ஏற்கனவே உத்தேசித்தபடியே ஓட்டுப்போட்டுவிடுகிறார்கள். விவாதம் மும்முரமானதால், கலக்கமும் அதிகரிக்கிறது.

### பெரும் பாவம்புரிவோர் யார்?

எதிர்க் கட்சித் தலைவரான லார்டு ஸ்னெல் பேசியதாவது:—

எழுதிப் படிப்பதால் விவாதத்தின் ருசி போய் விடுகிறது. ஆனால் அரசாங்க மந்திரிகளதான் பெரும்பாவம் புரிபவர்கள்; (கேளுங்கள்) அவர்களுடைய அனுபவத்திற்கு மீறிய பிரச்சினைகளைக் குறித்து அவர்கள் முடிவு கட்டவேண்டி யிருக்கிறது. அவர்கள் இலாகாக்களின் சார்பாகப் பேசவும் வேண்டியிருக்கிறது. கிராபோர்ட் பிரபு பேச்சு வன்மையில் மிகக் கெட்டிக் காரர்தான். சரியானபடி பிரசங்கம் செய்யப்பட வேண்டும். மோசமான பிரசங்கங்களை நான் வெறுக்கிறேன். உபயோகமற்ற விஷயங்களைக் கூறாமல் சாமாரியாகப் பேசுவதையும் நான் ஆட்சேபிக்கிறேன். பேச்சு உபயோகமானதாயிருக்க வேண்டும்.

### பொறுமைசாலிகள் மிகுந்த சபை

எனது 50 வருஷ அநுபவத்தில் இச் சபையில் பேசுவதே மிகக் கடினமான வேலையென்று நான் கருதுகிறேன். சுவர் போல் வரிசையாக உட்கார்ந்திருப்போரைக் கண்டு ஒருவன் பேசுகிறதில்லை. ஆனால் மிகச் சலிப்படைந்து எதற்கும் தயார் என்று காத்துக் கொண்டிருப்பவர்கள் முன்பே பேசுறார். [நகைப்பு] மௌனத்துடன் நீங்கள் வெறுப்படைந்து உட்கார்ந்திருப்பதே பிரசங்கஞ் செய்பவரை அதைரியப் படுத்துகிறது. தேவாலயத்தில் பிரார்த்தனை செய்வது போலவே இங்கு பேசவேண்டி யிருக்கிறது. [நகைப்பு] ஆனால் இச்சபையை விடப் பொறுமை சாலிகள் மிகுந்த சபை வேறு கிடையாது. சாதாரணமாக ஓர் அபேதவாதத் தலைவர் பேசுமுன்பே அவரிடம் வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது; ஆகவே தயர்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### கிராபோர்ட் பிரபுவின் பிரேரணை

கிராபோர்ட் பிரபுவின் பிரேரணை வருமாறு:

இந்தச்சபையில் பிரசங்கங்களை எழுதிப் படிப்பதை இச்சபை கண்டிக்கிறது. அம்மாதிரிச் செய்தல் இச்சபையின் பண்டைக்கால வழக்கத்திற்கு விரோதமானது; மேலும் சபையின் விவாதம் பாதிக்கப்படுகின்றது.

பிரேரணையைப் பிரேரித்த கிராபோர்ட் பிரபு கூறியதாவது:

காமன்ஸ் சபையைவிடச் சில விசேஷ சலுகைகள் லார்டு சபைக்கு உள்ளன. இங்கு பேசுவதற்குக் காலவரை குறிப்பிடப்படமாட்டாது. தொகுதிகளைப்பற்றியோ பத்திரிகைகளைப் பற்றியோ கவலைப்படவேண்டியதில்லை. ஆகவே பொதுஜன விவகாரங்களைக் குறித்து நாம் பேசலாம். இங்குதான் ஆழ்ந்த யோசனையுடன் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

---

## அழகுத் தெய்வம்

1 மங்கியதோர் நிலவினிலே
  கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும்
  இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு
  போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
  போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும்
  வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
  பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண் விழித்தேன்
  அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான்
  அதுவென்றே யறிந்தேன்

2 யோகந்தான் சிறந்ததுவோ
  தவம் பெரிதோ என்றேன்
யோகமே தவம் தவமே
  யோகமென வுரைத்தாள்
ஏகமோ பொருளன்றி
  இரண்டாமோ என்றேன்
இரண்டுமாம் ஒன்று மாம்
  யாவுமாம் என்றாள்
தாகமறிந் தீயுமருள்
  வான்மழைக்கே யுண்டோ?
தாகத்தின் துயர் மழைதா
  னறிந்திடுமோ வென்றேன்
வேகமுடன் அன்பினையே
  வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடனே பெய்துவதோ
  வேறுமோ என்றாள்.

3 காலத்தின் விதிமதியைக்
  கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர்
  கருவியா மென்றாள்
ஞாலத்தில் விரும்பியது
  நண்ணுமோ என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு
  பலித்திடலா மென்றாள்
ஏலத்தில் விடுவதுண்டோ
  எண்ணத்தை யென்றேன்
எண்ணினால் எண்ணியது
  நண்ணுங்கா ணென்றாள்
மூலத்தைச் சொல்லவோ
  வேண்டாமோ என்றேன்
முகத்திலருள் காட்டினாள்
  மோகமது தீர்ந்தேன்.

—சுப்பிரமணிய பாரதியார்.

---

கவிபுருடன் 'தேவியின் கற்புக்கும் செங்கோன் முறைக்கும் பூவுலகில் ஒப்பாக யார் போதுவார்' எனக் கூறினர். இவற்றான் இது நன்கு விளங்கும்.

மேலும், இவையெல்லாம் "பண்டை வினையின் பயனே என்பதைக் கவி

"படப்பாரவேரேகடுவினையைவிமன், படப்பாவைதன்னுடனேமன்னன்—

# கோட்டுப்புலிக்கு நீதிபதியின் எச்சரிக்கை

## கொலைவழக்கு விசாரணை

### பொதுத்தேர்தல் எதிரொலியா?

### போத்தல் அடியாலா அல்லது மோட்டார் மோதியதாலா மரணம் ஏற்பட்டது?

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நீதியரசர் திரு. F. J. சூற்ஸ் முன்பாக ஆறுவதாக வண்ணார்பண்ணையில் வசிக்கும் தட்டார வகுப்பைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்லப்பா என்பவரைச் சென்ற மாசி மீ 25உ அவ்வூர் சண்முகம் பொன்னுத்துரை என்பவர் ஓர் போத்தலால் மண்டையிலடித்தும், றோட்டில் தள்ளிவிழுத்தியும் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

ஆ. கனகசபை ஜூரித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி A. H. R. வீரசூரியாவும் எதிரி சார்பாகத் திரு. S. D தம்புவும் S. ஸ்ரோறரும் வாதித்தனர்.

முடிக்குரிய நியாயவாதி கூறியதாவது:—

இவ்வெதிரி வைத்திலிங்கம் செல்லப்பா என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பெற்றிருக்கிறார். செல்லப்பா யாழ்ப்பாணமிருந்து காங்கேசன் துறை றோட்டால் போனார். எதிரி அவரைப்பின்தொடர்ந்தார் எதிரி செல்லப்பாவைக் கிட்டினதும் "நேற்று நெருப்புப்பெட்டிகேட்க நீ என்ன சொன்னாய்" என்றுசொல்லி நிலத்தில் தள்ளிவிழுத்தி ஓர் போத்தலால் அவரை அடித்தார். இதுசம்பவம் அரசாங்கசபைத் தேர்தலின்று நடந்தது. காயப்பட்டவனை எதிரியின் சகோதரன் ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் சென்றான். எதிரியுடனேயே அவனும் வசித்து வருகிறான். காயக்காரன் இரண்டுநாளாக வீட்டிலேயே வைத்திருக்கப்பட்டான். சிறிதும் சுகமேற்படாமையால் மூன்றும் நாள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டான். 28-ந் திகதி இரவு ஆஸ்பத்திரியில் இறந்தான். பொலிசாருக்கு இவனால் தட்டுப்பட்டவன் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்மேல் டாக்டர் K. இராசா அவர்கள் விசாரணை செய்யப்படுகையில் தெரிவித்தவற்றின் சாரம் வருமாறு:—

கடந்த மாசிமாதம் 29-ம் தேதி பளவில் நான் பிரேதத்தைப் பரிசோதித்தேன்; காலஞ் சென்றவரது மாமனாராகிய தம்பர்—சின்னத்தம்பியும், மனைவியாகிய தங்கமுத்தவுமே பிரேதத்தைக் குறிப்புக் காட்டினர் அவருக்கு 55 வயதிருக்கும். 5 அடி 3 அங்குல உயரமிருப்பார். எதிரியும் காலஞ் சென்றவரும் ஏறக்குறைய‌த் தோற்றத்தளவில் ஒரே மாதிரியாக இருப்பார்கள். வலது பக்க நெற்றியிலும் வலது கன்னத்திலும் வலது தோள்மூட்டிலும் புருவத்திற்கு மேலாக மண்டையோட்டிலுங் காயங்கள் காணப்பட்டன. மண்டையில் காணப்பட்ட காயத்தாலேயே உயிர்ச் சேதம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அக் காயத்தினாலேயே கண்காயமும் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அக்காயம் கனமான போத்தலால் ஏற்பட்டிருக்கலாம். மற்றவைகள் கீழே விழுந்தமையால் ஏற்பட்டிருக்கலாம். மோட்டார் வண்டியுடன் மோதப்பட்டாலும், ஏற்பட்டிருக்கலாம்.

சாட்சி மீண்டும் குறுக்கு விசாரணையின் போது தெரிவித்தவற்றின் சாரம் வருமாறு:—

காயங்கள் கனமான போத்தலால் அடிக்கிலும் சாதாரணமான போத்தலாலும் ஏற்பட்டிருக்கலாம். காயங்கள் யாவும் வலப் பக்கத்திலேயே காணப்படுகின்றன முகங்குப்புற விழுந்தால் இம் மாதிரியான காயங்கள் ஏற்படா; மோட்டார் வண்டி கெதியாகப் போகும்போது தட்டித் தூக்கியெறிந்தாலும் இம் மாதிரியான காயங்கள் ஏற்படும் காயங்களில் உடைந்த போத்தலோடுகள் காணப்படவில்லை. பொதுவாகச் சொல்லுமிடத்துக் காயங்கள் உண்டாயிருக்கலாமென நிச்சயமாகச் சொல்ல முடியாது. காயமடைந்த சில நிமிஷ நேரத்தின் பின்னரே அறிவு கெட்டிருத்தல் வேண்டும். எது எவ்விதமிருப்பினும் பெலமாகக் கீழே வீழ்ந்தாற்றான் இம் மாதிரியான காயங்கள் ஏற்படும்.

இரண்டாவதாக டாக்டர் W. S. நதானியேலும், அதன்பின்னர் அப்போதிக்கரி N சுப்பிரமணியமும சாட்சியாகவிசாரணைசெய்யப்பட்டார்கள். திரு. சுப்பிரமணியம் தனது சாட்சியத்தில் காலஞ்சென்றவரைக் கொணர்ந்தது சின்னத்துரையேயெனவும் மோட்டார்வண்டி தட்டியமையாலேயே காயமுண்டாகியதெனச் சொன்னதாகவும் குறிப்பிட்டார்.

தட்டாதெரு வாசியும் தட்டார வகுப்பைச் சேர்ந்தவருமாகிய சின்னத்தம்பி-இராமலிங்கம் சொன்னவற்றின் சாராம்சம் வருமாறு:-

"சம்பவம் நடைபெற்றவன்றே அரசாங்கசபைத் தேர்தலும் நடைபெற்றது அப்போது எனக்குக் காய்ச்சல். அதனால் தம்பர் செல்லத்துரையை வைத்தியரிடம் மருந்த வாங்கிக்கொண்டு வரும்படி அனுப்பினேன். அவர் மருந்தைக் கொண்டு வந்து கந்தநின்மேல் இருவருமாக வாசலிலிருந்து கதைத்துக்கொண்டிருந்தோம். காலஞ்சென்றவர் குடிவெறி மிகுதியினால் தூஷணையாகப் பேசிக்கொண்டு மீனுடன் வந்தார். அவர்பின்னாக எதிரி வந்து காலஞ்சென்றவரைப் பிடித்துத் தள்ளினர். நெருக்கணில் செல்லப்பா முகங்குப்புற விழுந்தார். எதிரி நேரேபோய்ச் சிறிது தூரத்தின்பின் அவ்விடம் வந்தார். அப்போது காலஞ்சென்றவர் நிலத்திலேயே கிடந்தார். வந்ததும் அவரது கையைப் பிடித்துப் புரட்டினார். பின் ஒரு போத்தலால் தலையில் அடித்தார். நான் பயமிகுதியினால் வாய்திறக்கவில்லை காய்ச்சல் வருத்தத்தினால் எழுந்து பார்க்கவில்லை. பின்னர் நானும் எழுந்து வீட்டினுட் செல்ல, நாங்களென் இதில் நிற்பான் என்று சொல்லிவிட்டு செல்லத்துரையும் தனது வீட்டிற்குச் சென்றார். அப்பால் நான் வெளியே வரவில்லை. 29ம் திகதியன்று சப் இன்ஸ்பெக்டர் திரு வைமன் எனது வீட்டிற்குவர நான் எனக்குத் தெரிந்த உண்மையைத் தெரிவித்தேன.

சாக்ஷி குறுக்கு விசாரணையின் போது சொல்லியதாவது:—

தம்பு:- நீ இறந்தவனுக்குக் கிட்டிய சொந்தக்காரனல்லவா?

இராமலிங்கம்:— ஒருக்காலுமில்லை

த:- நீ ஒருவயதுபோனவர், கோட்டு வேலைகளும் உனக்கு நல்லாய் தெரியும். —என்னுடைய வழக்குக்கு வந்திருக்கிறேன்.

த:- வைத்திலிங்கம் விதானைக்கு அலவாங்கால் அடித்ததாக உன் மீது வழக்குத் தொடரப்பட்டதல்லவா? —இல்லை

தொடர்ச்சி 3ம்பக்கம்

## பாராளுமன்றத்தில் நிகழ்த்தும் சொற்பெருக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தமது பிரசங்கத்தினால் பயனில்லை என்று எண்ணியே பேசுகிறார்.

காமன்ஸ் சபையின் மனோபாவம் வேறு விதமாயிருக்கிறது. ஒரு சமையம் திரு. சர்ச்சில் பேசும்பொழுது கல்லாய்ச்சமைந்து அலட்சியமாக விருப்பதென்று தொழிற்கட்சியினர் தீர்மானித்தனர். அன்று திரு சர்ச்சில் நிகழ்த்திய பிரசங்கத்தால் யாதொருபயனுமேற்படவில்லை

### இருவரின் சபதம்

லார்டு மோட்டிஸ்டோன் பேசியதாவது:—

மகா யுத்தம் முடிந்தபின்தானும் திரு போனர்லாவும் காமன்ஸில் எழுதிப் படிக்கிறதில்லை என்று சபதம் செய்து கொண்டோம். அதன்படியே நாங்கள் நடந்துகொண்டோம் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்த பொழுது திரு போனர்லா புள்ளி விபரங்களை எழுதிவைத்துக் கொள்ளாமலேயே பிரசங்கம் செய்தார். காலஞ்சென்ற லார்டு பால்போர் முதன் முதலில் மாமன்றில் பேசப் பயந்தார். ஆனால் எழுதப் படிக்க அவர் விரும்பவில்லை. குளிர்ந்த ஜலத்தில் குதித்து நீந்துவதென்று அவர் முடிவுசெய்தார். அதன் பின் அவர் எழுதிப்படித்ததே கிடையாது.

### கேட்க வந்திருப்பவர்களிடம் அலட்சியம்

வைகவுண்ட் ஹாலிபாக்ஸ் யாதாவது;- பிரபல நூலாசிரியர்களான எட்மண்ட்பர்க் ஷெரிடன்லார்டு செஸ்டர் பீல்ட் முதலியோர் சில பிரசங்கங்களை எழுதியே படித்திருக்க வேண்டும். 30 வருஷங்களுக்கு முன் காமன்ஸ் சபைக்குள் நான் நுழைந்த பொழுது ஓர் சிறுவன் மிகுந்த பயத்துடன் பள்ளிக்கூடம் போவதுபோல் இருந்ததாகக் லார்டு பேர்போரிடம் கூறினேன் உடனே அவர் கூறியதாவது:—

'என் அருமைக் குழந்தாய்! இங்கு பயப்பட வேண்டியதில்லை; எவ்வளவு தடவை பேச முடியுமோ அவ்வளவு தடவை பேச வேண்டும். அம்மாதிரி நடப்பதால் உன் பிரசங்கத்தைக் கேட்போரிடம் உனக்கு அலட்சியம் ஏற்பட்டு விடும். சலிக்கப் பேசுவோர் அம்மாதிரி மனோபாவங் கொண்டவர்தான்.' [நகைப்பு]

### இரண்டு முறைகள்

மிட்டல்டன் பிரபு பேசியதாவது: ஜனங்களைச் சரியானபடி நடத்த இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று பிரசங்கத்தை முன்னதாகவே தயார் செய்து விடுவது. மற்றொன்று வசிரூர உண்டு அதிர்ஷ்டத்தை நம்பியிருப்பது [நகைப்பு] திரு. ஜோஜப் சேம்பர்லின் முன்னதாகவே தயாரித்த பிரசங்கங்கள்தான் சிறந்தவையாக இருந்தன; லார்டு சபையில் பேசுவது நிவர்த்திகளைக் கொண்டு இடுகாட்டில் பேசுவது போலிருப்பதாக லார்டு ஷேர்புருக் கூறினார். நானும் அதேபோல இச் சபையில் நிசப்தம் குடிகொண்டிருப்பதைக் கவனித்திருக்கிறேன். லார்டு ரோஸ்பரி ஒரு சமயம் தாம் என்னபேசப் போகிறார் என்று தமக்கே தெரியாதென்று கூறிவிட்டுப் பின் பேசினார். அந்தப் பிரசங்கம் மிக்க ருசிகரமாயிருந்தது.

### வயோதிகர்களின் நிலைமை

லார்டு ஆர்னல்ட் பேசுகையில் பல பிரபுக்களுக்கு வயதாகி விட்டபடியால் பேசுவதால் பலஹீனமடைவார்கள் என்றார். எழுதிப் படிக்கும் வழக்கம் அதிகரித்திருப்பதாகத் தமக்குத் தோன்றவில்லை என்று ஆன்ஸ்லோ பிரபு கூறினார்,

லார்டு ராங்கில்லூர் பிரேரணையை ஆதரித்தார்.

பிரசங்கத்தை எழுதிப்படிக்காதே என்றே லார்டு ஆன்ஸ் லோவின் தந்தை தமக்குப் புத்தி புகட்டியதாக லார்டு ஹேஸ்டிங்ஸ் கூறினார்

கடைசியாக லார்டு கிரபோர்ட் விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—காமன்ஸ் சபையைவிட இச்சபை ஊக்கமூட்டத் தக்கதாகவில்லை. நான் பேசுபொழுது ஒருவர் குறுக்குடுவதை விரும்பவில்லை. ஒருவருடைய பேச்சு வன்மையை கவனிக்கத்தக்கது. கூச்சலிடுவோரிடம் அவர்காட்டும் சகிப்புத்தன்மையைச் சபை நம்பியிருக்கவில்லை.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டவிச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் இ. வீ. & சன்ஸ் கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தில் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| இல | தி. | ரூ | வட்டி | பெயர் | ஊர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| | 1933ம் ஆண்டு மார்ச் மாதம் | | | | | |
| C 4027 | 21 | 10 | 1 | மாப்பாணர் குமாரசிங்கம் | செல்லாலை | பொன் தாலி 1 |
| 4051 | 23 | 12 | ,, | கணபதியார் காசலிங்கம் | நல்லூர் (க கோயிலடி) | மோதிரம் 1 |
| | 1934 ஆண்டு சித்திரை மாதம் | | | | | |
| 5505 | 8 | 60 | ,, | நல்லதம்பி பெண் தங்கம் | கரையூர் | அச்சக்காப்புசோடி 1 |
| 5760 | 30 | 8 | ,, | கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை | சிவியாதெரு கிழக்கு | அச்சாக் [கூடு 1 |
| | ஆடி | | | | | |
| 6898 | 23 | 15 | ,, | S. குலசேகரம் | Rly. Station | முறுக்குக்காப்பு [சோடி 1 |
| | ஆவணி | | | | | |
| 6971 | 3 | 30 | ,, | கந்தையா ஆறுமுகம் | வண்ணார்பண்ணை | சங்கிலி 1 |
| 7060 | 10 | 50 | ,, | பெருமாள் ஐயம்பிள்ளை | சாவனை | வை சொண்டைப்பு 1 மு. அட்டியல் பதக்கமுடன் 1 |
| 7126 | 15 | 20 | ,, | நல்லதம்பி பொன்னுத்துரை | மானிப்பாய் | மோதிரம் 1 வை குண்டுவைத்த ½ பவுண் 2 |
| 7140 | 16 | 80 | ,, | வயித்தியநாதர் அம்பலவாணர் | அனலைதீவு | மு அட்டியல் பதக்கமுடன் 1. 2 கல்லில்லை. |
| 7194 | 28 | 25 | ,, | க. முத்துத்தம்பி | கொட்டடி | மோதிரம் 2 பழுதடை பஞ்சாயுதம் 1 |
| | ஐப்பசி | | | | | |
| 8122 | 20 | 20 | ,, | பி. முகமது அபூபக்கர் | சோனகதெரு | மோதிரம் 1 |
| 8228 | 26 | 18 | ,, | A. S. இசைவீரசிங்கம் | Chapel Street | மோதிரம் 1 |
| | மார்கழி மீ | | | | | |
| 8746 | 1 | 33 | ,, | சின்னப்பு காசிப்பிள்ளை | தெல்லிப்பழை | குண்டுச்சங்கிலி அச்சாக்கூடுடன் 1. |
| 8758 | ,, | 12 | ,, | P. S. பேர்னண்டோ | கொழுக்கியில்லை பெரியகடை | மோதிரம் 1 |
| 8892 | 9 | 15 | ,, | அந்தோனி யோவான் | தெல்லிப்பழை | கவுத்தோர் 1 |
| 9227 | 31 | 80 | ,, | கதிர்காமர் செல்லத்துரை | சண்ணாகம் | அச்சக்காப்பு சோடி 1 |
| 9228 | ,, | 90 | ,, | ஆறுமுகம் சங்கரப்பிள்ளை | சுன்னாகம் | பொன்கெட்டிப் பூரான்ட்டியல் பதக்கமுடன் 1 |
| | 1935 ம் ஆடி வைகாசி மீ | | | | | |
| 9287 | 3 | 13 | ,, | செல்லத்தம்பி இராசதுரை | சண்டிக்குளி | மோதிரம் 1 |
| 9453 | 11 | 65 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | பீலிக்காப்பு சோடி 1. 1 கலரயில்லை |
| 9454 | 11 | 80 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | பொன் மு அட்டியல் டிம்மியுடன் 1 |
| 9489 | 13 | 80 | ,, | அம்பலவாணர் வேலுப்பிள்ளை | அராலி | தெற்கு செட்டிக்கொலின் சோடி 1. 1 முறிவு. 1 கல்லில்லை |
| | மாசி மீ | | | | | |
| 9857 | 3 | 135 | ,, | A. K. முத்துக்குமாரு | புத்தூர் | செபூ அட்டியல் பதக்கமுடன் 1 |
| 9917 | 6 | 135 | ,, | குமாரசாமி சண்முகநாதன் | நல்லூர் வடக்கு | குண்டுச்சங்கிலி அச்சாக்கூடுடன் 1 |
| D 237 | 23 | 105 | ,, | ஆறுமுகம் சங்கரப்பிள்ளை | சுன்னாகம் | இறப்பிள்ளைக்காப்பு சோடி 1 வை குண்டுச்சங்கிலி பவுண் உட்பட1 |
| 279 | 25 | 35 | ,, | குமாரசாமி சண்முகநாதன் | நல்லூர் வடக்கு | மினுகு காப்பு சோடி 1 |
| 310 | 27 | 18 | ,, | வேலுப்பிள்ளை செல்லையா | சண்டிக்குளி | கவுத்தோர் 1 |
| | பங்குனி மீ | | | | | |
| 545 | 12 | 80 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | குண்டுச்சங்கிலி 1 |

விற்பனவு தாது ஆடி மீ 13ந் திகதிக்குச்சரியான 23 7-36 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகைகள் பிறகலாக மீதி மேற்படியாரிடத்தில்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இ. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தின் மேன்தர்

(Mis 77. 13 & 16-7-36)

களவினலாய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானல் 1விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசகமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y-203. 21-11-35—20-11-36) (சி.)

## விஷமப் பிரசாரம்

### இலங்கையைப்பற்றி இங்கிலாந்து மாதின் அபிப்பிராயம்

இங்கிலாந்திலுள்ள டோவேஜர் லேடி ரோண்டோ என்ற ஒரு வெள்ளை மாதின் இலங்கையில் வசிக்கும் அவாது நண்பர் ஒருவர் இலங்கையைப்பற்றி விஷமத் தனமாகச் சில பொய்யான விஷயங்களை எழுதியிருக்கிறர். அந்நிருபரின் கையெழுத்துடன் அது "மார்னிங்போஸ்ட்" என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக இலங்கை ஐரோப்பியர் சர்கர் சந்திகையொன்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. சகல விஷயங்களைக் குறித்தும் பொருத்தமாகத் துறைகூறும் அங்கத்தவர்களுக்கு ஆதா வளிக்கக்கூடிய இச்சங்கம் இந் நிருபர் எழுதிய விஷயங்கள் பொருத்தமற்றவை என்று பலமாகக் கண்டிக்கிறது. அக் கடிதத்திலிருந்து லேடி ரோண்டாவின் நிருபர் இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவரென அறியப்படுகிறது. ஆனால், இலங்கையைப் பார்வையிடுவதற்காகச் சில நாட்கள் தங்கிச் செல்லும் யாத்ரிகர்ஒருவர் இத்தகைய அபாரமான பொய்களை எழுதலாமென எதிர்பார்க்கலாம்; எனினும் இந் நிருபத்திலிருந்து அந் நிருபரின் அறியாமையும் லேடி ரோண்டாவின் விஷமத்தனமும் நன்கு புலப்படுகின்றன.

நமது அங்கத்தவர்களில் அநேகர் இன்னும் இலங்கையைப்பற்றி நன்கு அறியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம். ஆகவே அப்படிப்பட்ட தப்பபிப்பிராயமுள்ள நம் சகோதர சகோதரிகளுக்கு உண்மையை அறிவுறுத்துவது அச் சங்கத்தவர்களின் கடமையாகவிருக்கிறது.

### "பைத்தியம்பிடித்த அரசியல்"

லேடி ரோண்டாவுக்கு எழுதப்பட்ட கடிதத்தின் சுருக்கம் வருமாறு:-

"கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த அபேட்சகர்கள் வெற்றியடைந்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல ஆரம்பித்ததால் அநேகர் கொல்லப்பட்டதுடன் ஏராளமான பேர் காயமடைந்தனர். இப்பைத்தியம் பிடித்தது புது அரசியல் அமுலுக்கு வந்ததிலிருந்து இலங்கையிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வெளியேறிவிட்டது.

அரசாங்கசபையிலிருக்கும் சில அங்கத்தவர்களுக்கு எழுதவாவது படிக்கவாவது தெரியாது. ஏராளமான பேருக்கு ஆங்கிலம் ஒருவார்த்தைகூடப் பேசத்தெரியாது. எனினும் அரசாங்கசபை விவாதங்கள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. - - - அந்நிலைமையில் எங்களது பிரதிநிதிகள் எப்பேர்ப்பட்டவர்களெனநீங்கள் எளிதில் யூகித்துக்கொள்ளலாம். இந்த அங்கத்தவர்களுக்கு உலக விவகாரங்களே முற்றிலும் தெரியாது. மேலும் அரசியல் அறிவோ பூஜ்யம். அந்த அரசியல் அறிவும் அவர்கள் மூளையிலும் ஏறாது."

### மரத்தில் தொங்கிய மாது

#### காக்கைவலி நோயாளியின் விநோத தற்கொலை

தங்காலை ஜூலை 7—

மோதாவான கிராமத்தில் நடுத்தர வயதுள்ள ஓர் மாது மகனுடன் சண்டை போட்டுவிட்டுத் தனது தோட்டத்தில் ஓர் மரத்திலிருந்து தொங்கித் தற்கொலை புரிந்துகொண்டாள். ஏ. அஙகிஹாமி என்ற அந்தமாது காக்கை வலிப்பால் பிடிக்கப்பட்டவள். சம்பவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

மரண விசாரணையில் வெளியான விபரங்களாவன:—

மேற்படி மாதுக்கு அடிக்கடி காக்கை வலிப்பு வருவதுண்டு. அநேக தடவை கிணறு குளம் நெருப்பு முதலியவைகளில் விழுந்திருக்கிறாள். ஒவ்வொரு முறையும் வலிப்பு வந்தபின் அவள் புத்தி சுவாதீனமற்றவள் போல் நடந்து வந்தாள். ஞாயிறன்று காலையில் காக்கைவலிப்பு வந்தபின் 50 சதம் காணப்படவில்லை யென்று கூறித் தேடியலைந்தாள். தனது மகன்தான் அதைத் திருடியிருக்கவேண்டுமென்று அவள் கூறினாள். சிறுவன் திருடவில்லையென்று கூறவே, அவள் அவனைக் கையில் கடித்து விட்டாள். உடனே அவளது புருஷனும் குழந்தைகளும் வீட்டைவிட்டுப் போய்விட்டனர்.

ஒருமணி நேரங்கழித்து அவர்கள் திரும்பி வந்த பொழுது அவள் ஓர் மரத்தில் தொங்குவதைக் கண்டு திடுக்கிட்டுப் போயினர். கயிற்றை வெட்டி அவளைப் பார்த்தனர். அதற்குள் உயிர் போய் விட்டது.

மரண விசாரணையதிகாரி தற்கொலையாலேற்பட்ட மரணமென்று தீர்ப்புக் கூறினார்.

## கோட்டுப்பிட்டிக்கு நீதிபதியின் எச்சரிக்கை

இரண்டாம் பக்கத் தொடர்ச்சி

த:- உபாத்தியாயர் அம்பலவாணருக்கும் இன்னுமொருவருக்கும் மெதிராக வழக்கிருந்தது உனக்கு ஞாபகமிருக்கிறதா? —ஞாபகமில்லை

த:- பொலிஸ்கோட்டில் இறந்தவன் உனது சொந்தக்காரன் என்று சொன்னதை மறுக்கிறாயா? —ஆம் மறுக்கிறேன்

த:- தலையில்தானே அடித்தவன் —ஆம்

த:- இதைப் பொலிஸ்கோட்டில் சொன்னாயா? பொலிஸ்கோட்டில் விலாவில் அடித்ததாகச் சொல்லியிருக்கிறாய்? —நான் பொலிஸ் கோட்டில் தலையில் அடித்ததாகச் சொன்னேன் ஆனால் விலாவில அடித்ததாக முதல் மறதியாகச் சொல்லிப் பிறகு திருத்தினேன

த:- அடிக்கும்போது நீ பார்த்ததாகவும், ஆனால் அடி எங்கே விழுந்தது என்று உனக்குத் தெரியாதென்றும் நீ பொலிஸ்கோட்டில் சொல்லவில்லையா? —நான் அப்படிச் சொல்லவில்லை

த:- பொலிஸ்கோட்டில் காயக்காரனைப் போட்டிக்கோவுக்குத் தூக்கிச்சென்றதைக் கண்டதாகச் சொன்னாயல்லவா? —ஆம் நான சொன்னேன்

த:- அவனுக்கு என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?— நான் கேள்விப்பட்டேன்

த:- பொலிஸ் கோட்டில் அவனை ரிக்சோவில் கொண்டு போனதைக் கண்டதாகச் சொல்லியிருக்கிறாயல்லவா?—பதில் இல்லை

த:- அது ஒரு கடுமையான அடியல்லவா?— அவ்வளவு கடுமையான அடியல்ல

த:- அந்தப் போத்தலின்நிறமென்ன —கறுப்பு

த:- உனக்குத் தங்கம்மாவையும மாணிக்கத்தையும் தெரியுமா?— (பெண்கள்) ஆம் தெரியும்

த:- அடித்த பின்னும் அவன் போத்தலை வைத்திருந்தானோ என்பதைப் பற்றிச் சொல்ல முடியுமோ?— நான் அதை அவதானிக்கவில்லை

த:- நான் ஏன் இதைச் கேட்டேன் என்றால் அப் பெண்கள் போத்தல் உடைந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள்

த:- நீ அவ்விடத்தில் தங்கம்மாவைக் கண்டாயா? —ஆம் கண்டேன்

த:- நீ அவளுக்கு இதைப்பற்றிச் சொன்னாயா?— சொல்லவில்லை

த:- தலைகீழாக விழுந்தான் செத்திருப்பான என்று சொன்னாயா?— ஆம

த:- நீர் ஏன் மற்றவர்களைக்கொண்டு இதைப்பற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்கவில்லை என்று பொலிஸ் நீதிபதி உன்னிடம் கேட்கவில்லையா?—பதில் இல்லை.

த:- அரசாங்கசபைத் தேர்தல் எப்போது என்று தெரியுமா? —ஆம் தெரியும்

த:- இவ்வெதிரி திரு நெவின்ஸ் எனபவருடைய பழைய மாணவன் அல்வா?—எனக்குத்தெரியாது.

த:- அவர் முதல் உபாத்தியாயரல்லவா? —ஆம்

த:- அவரிடம் நீர் படிக்கவில்லையா? —இல்லை

த:-எதிரியின் மாமன் நாகன் என்டவரைத் தெரியுமா?—ஆம்

த:- அவரும் (நாகன்) அவரைச் சேர்தவர்களும் நெவின்ஸ்பக்கத்துக்கு வேலைசெய்தவர்களல்லவா? —ஆம்

த:- நாகனுடைய மகன்மற்றிக்குலேஷன்வகுப்பில் படிக்கிறானல்லவா? —ஆம்

த:- ஆனபடியால்தான் அவரும அவரைச் சேர்ந்தவர்களும் நெவின்ஸ் பக்கத்துக்காக வேலை செய்தார்களல்லவா? — எனக்குத் தெரியாது

த:- நீர் யாருக்காக வேலைசெய்தீர்? —நான் ஒருவருக்காகவும் வேலை செய்யவில்லை, பொதுவாக இருந்தேன்

த:-இந்த எதிரி ஓர் பச்சைக்கொடி கட்டினது தெரியுமா?—எனக்குத் தெரியாது

த:-இவன் ஓர் புதுவீடு கட்டுகிறானல்லவா?—எனக்குத் தெரியாது

த:- மூன்று நாட்களாக இறந்தவன சுகவீனமாய் இருந்தான், நீர் யாருக்கும் அறிவித்தீரோ?—இறந்தவனின் மூத்த சகோதரன் சோமுவுக்கு அறிவித்தேன்.

த:- அப்போது நீ தகாத ஒரு ஆளிடமல்லவா சொல்லிவிட்டாய்? —ஆம் நான் செய்ததைச் சொன்னேன்

த:- ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனதைப்பற்றி யார் சொன்னது?

சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்யப்படுகையில் சாட்சி மிகவுங் கவலையீனமாகவும் இடையிடையே சிரித்துக்கொண்டும்; இடையிடையே ஆங்கிலத்தில் மறுமொழி சொல்லியும் மூன்னும் பின்னும் முரணாகவும் சாட்சியம் சொனனார். அதனைக் கண்ட நீதியாசர் சாட்சியை நோக்கி நீ கூண்டிலேறியது தொடக்கம் இவ்வளவு நேரமும் மிகவும் கவலையீனமாகச் சாட்சி சொல்லுகிறாய்? உனது செய்கைகளை நான் நீண்டநேரமாகக் கவனித்தேன். உனது புன்சிரிப்பை உனது வளவிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் ஆங்கிலம் தெரிந்தால் நீ ஆங்கிலத்தில் பேசலாம். அல்லாவிடில் முதலியார் தமிழ்ப்படுத்தும்வரை பொறுத்திருந்த பதிலசொல்லுதல் வேண்டும். உனது குரங்குச் சேட்டைகளை மறவே மறந்துவிடு. இன்னுமொருதரம் நான் உன்னை எச்சரிக்கை செய்யவேண்டியவிதமாக நடந்துகொள்ளாதே அப்படி நடந்தால் நீ பினனர் மனம்வருந்தநேரிடும். இதனைக் குறிப்பாக மனதில் வைத்துக்கொண்டு சாட்சியம் பகர்"என எச்சரிக்கை செய்தார்

—அவருடைய மாமனே எனக்குச் சொன்னார்

த:- நீர் கணடதைப்பற்றி அவருக்குச் சொன்னீரா?—இல்லை

த:- ஏன் சொல்ல வில்லை?—அவர் என்னிடம் கேட்கவில்லை? ஆனபடியால் நான் சொல்லவில்லை

த:- எப்படி சப் இன்ஸ்பெக்டர் வைமன் கறுத்தப்போத்தலென்று அறியவந்தார் என்பது உமக்குத் தெரியுமா?—ஆம்

த:- அன்று அது ஒரு பரபரப்பான நாளல்லவா?—ஆம்

த:- இனசனத்தவர்களை விட வேறு ஆட்களும் போக்குவரத்துச் செய்தனரல்லவா? —ஆம்

த:- தங்கம்மா இறந்தவனுடைய சகோதரியல்லவா? —ஆம்

த:-செல்லத்துரை உனது சொந்தக்காரனல்லவா? – ஆம்

த:- இறந்தவனுடைய கையிலே ஏதாவது இருக்கக் கண்டாயா?— ஆம்; அவர் மீன்வைத்திருந்தார்

த:- இதைப்பற்றி யாருக்காவது அறிவித்தாயா?—இல்லை; என்னிடம ஒருவரும் கேட்கவில்லை

த:— மாணிக்கம் மூன்பு அப்படி சொல்லி இருக்கிறபடியாலல்லவா நீயும் இப்போது அப்படிச் சொல்லுகிறாய்?—இல்லை; நான அவ்விடத்தில் அவன் மீனுடன் நிற்கக் கண்டேன

#### கைம்பெண் சாக்ஷியம்

த:- நீ மாணிக்கத்தை அவ்விடத்திற் கண்டாயா?—இல்லை

அதன்பின் தம்பு கைம்பெண் தங்கம்மா சொல்லிய சாட்சியம் வருமாறு:—

எனக்குமுன் சாட்சி சொன்னவரது வீடு எனது வீட்டுக்குக் கிட்டத்தான் இருக்கிறது. இறந்தவன் காயப் பட்டதை நான் அறிவேன். நான் எனது வீட்டுப் படலையில் நின்றேன். இறந்தவன் மீனுடன் எனது படலையைக் கடந்து சென்றான். இறந்தவன் எனது சகோதரன் பொன்னன் (பொன்னுத்துரை) என்பவன் தான் அவனைப் பின்னுக்கு நின்று தள்ளி விழுத்தினான் உடனே செல்லப்பா நிலத்தில் விழுந்தான். எதிரி அவனை வறி மீதித்து ஓர் போத்தலால் அடித்தான். இப்படி அடித்துவிட்டு எதிரி ஓடிவிட்டான்; போத்தலால் 5 அல்லது 6 அடி அடித்தான். நான் சத்தம போட்டேன. இதன்பின் செல்லப்பாவின் மனைவிக்கு இதைப்பற்றி அறிவித்தேன்; நான் சொன்னதாவது: 'உனது புருஷன் அடிபட்டு மணலை உடைபட்டும் கிடக்கிறான'

அவனுடைய மனைவி அந்த இடத்துக்கு வரவில்லை. காயப்பட்டவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன பின்தான் அவள் அங்கே வந்தாள். எனது மாமனார் சின்னத்தம்பி காயக்காரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார். இதன்பிற்பாடு நான் (மனைவிக்கு அறிவித்தபின்) எனதுவீட்டுக்கு வந்துவிட்டேன். பின்பு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது: நான் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணையின்போது சாக்ஷி சொல்லியதாவது:-

த: நீ மனைவிக்கு அறிவித்ததாகச் சொல்லுகிறாய் ஆனால் அவளோ தனக்கு அடித்தவனைத் தெரியாதென்று சொல்கிறாள். அது எப்படி ?—ஆம் அவளுக்குத் தெரியாதுதான்.

த: மருமகன் சுப்பையா அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவில்லையா?—இல்லை சோமுதான் கொண்டு போனான்.

த: பொலிஸ் கோட்டில் எதிரி கையில் போத்தல் வைத்திருந்தான் என்றும் அதனல் அடித்தான்என்றும் சொல்லி இருக்கிறாயல்லவா? — எதிரி செல்லப்பாவைத் தள்ளினதைக் கண்டேன் ஆனால் போத்தலால் அடித்தைதக் காணவில்லை.

த: நீதவானுக்குப் போத்தல்உடைந்து போனதென்று சொல்லி இருக்கிறாயல்லவா?—ஆம் கண்டதைச் சொன்னேன்.

த: போத்தல் உடைந்த துண்டுகளை எடுத்தாயா?—துண்டுகள பக்கங்களில் கிடந்தனதான எடுக்கவில்லை

த: வெள்ளைப்போத்தலா?— ஆம்.

த:- எதிரி போத்தலைகொண்டு போகவில்லை என்றதை நிச்சயமாகக் கூறுவாயா?—அடித்தபின் அது உடைந்துவிட்டது. ஆகையால் கொண்டுபோகவில்லை.

த:- விதானை கிட்டத்தான் இருக்கிறவரா ?—இல்லை.

த:- இறந்தவன் தள்ளாடித் தள்ளாடித்தான் நடந்தானா?—ஆம்.

த:- எதிரி ஓர் வளவு வாங்கி அதில் ஓர் வீடு கட்டி இருக்கிறானல்லவா?—எனக்குத் தெரியாது.

த:- உனது புருஷன் இருக்கிற காலத்திலும் அவனுடன் உனக்குப் பிடிக்காமல் விசாலாட்சியுடன் இருந்தாயல்லவா?— இல்லை, நான் அவருடன் தான் இருந்தேன்.

த:- நீ நாகலிங்கமிடமிருந்து ஒரு பதக்கம் களவாக எடுத்துப் பிடிபட்டது தெரியுமா?—நான் வீட்டை விட்டு வெளியே போவதில்லை. அல்லாமலும் இதைப்பற்றி எனக்குத் தெரியாது.

த:- உனக்கு நாகரைத் தெரியுமா? —எனக்குத் தெரியாது.

த:- நீ களவெடுத்த அன்று அடிபட்டாயல்லவா? — இல்லை, எனக்குத் தெரியாது.

த: நீ மீன் கொண்டு போனாயா? —இல்லை செல்லப்பாதான்கொண்டுபோனார். நான் வெளியே போகிறதில்லை.

அடுத்த படியாக முத்துக்குமாரு கைம்பெண் மாணிக்கம் தெரிவித்ததாவது —

நான் தலையாளியில் வசிப்பவள். குறித்த தினத்தன்று நான் அந்த ரோட்டால் போய்க் கொண்டிருந்தேன்; அப்போது எதிரி இறந்தவன் பின்னால் சென்று நேற்று இரவு நெருப்புப் பெட்டி கேட்க நீ என்னடா சொன்னாய் என்று கேட்டார்; எதிரி 'போடா மடையா' என்று சொல்லிவிட்டுப் போனார். எதிரி ஓடிச் சென்று பின்னால் நின்று (செல்லப்பா) இறந்தவனைத் தள்ளி விழுத்தினார். அவன் முகங் குப்புற விழுந்தான. திரும்ப ஓர் வெள்ளைப் போத்தலால் அடித்தான். அடி எங்கே விழுந்ததென்று என்னால் சொல்ல முடியாது. எதிரி வீட்டில் நின்று வெளிக்கிட்டபோதே கையில் ஒரு போத்தலுடன் வந்தான்.

நான் என் வீட்டுக்குச் சென்றுவிட்டேன. எதிரியையும் இறந்தவனையும் எனக்குத் தெரியும், இதைப்பற்றி ஒருவருக்கும நான சொல்லவில்லை; நான்கு நாட்களுக்குப் பின்னரே சப் இன்ஸ்பெக்டருக்கு நான் இதைப் பற்றிச் சொன்னேன். நான் வேளாளப் பெண்.

த:- நீ ஓர் கோவிய மனுஷியா?— இல்லை

த:- சம்பவம் நடந்த இடத்துக்குக் கிட்ட அநேக வீடுகளுண்டல்லவா? —ஆம

த:- அநேகர் போக்கு வரவு செய்தனரல்லவா?—ஆம

த:- கார்கள் போய் வந்துகொண்டிருந்தன?—ஆம்

த:- இவைகளுக்கிடையேதான் இச்சம்பவம் நடந்ததா?—ஆம்

த:- இறந்தவனும், நீயுமாத்திரமல்ல வேறு இனத்தவர்களும் அங்கே நின்றனரல்லவா?—ஆம்

த: உனக்குத் தங்கத்தைத் தெரியுமா?—ஆம்.

த:- மருமகன் சுப்பையாவையும் தெரியுமா? —ஆம்.

த:- இறந்தவன் இதற்கு முன்னும் குடிவெறியால் பலதடவைகளில் ரோட்டில் விழுந்திருக்கிறானல்லவா? —எனக்குத்தெரியாது.

த: உனக்கு முன்னர்ச் சாட்சியம் சொல்லிய பெண்ணைத் தெரியுமல்லவா? —ஆம்.

த:- அவள் இச்சம்பவம் நடந்தபோது, தான் கண்டதாகச்சொல்லுகிறாளல்லவா? — அநேகர் கூட்டமாக நின்றபடியால நான் அதைக் காணவில்லை.

த:- நீ அவளை அங்கே காணவில்லையா?—இல்லை

த:- ஆள் விழுந்தஉடனேயே அடித்தானா?— ஆம

த:- அடி எங்கே விழுந்ததென்று உன்னால் சொல்ல முடியுமா?— இல்லை

த:- அவன் முகங் குப்புறத்தான் விழுந்தானா?—ஆம

த:- பொன்னுத்துரை பின்னுக்கு நின்றானா?—ஆம்

த:- அடித்ததும எதிரி எங்கு சென்றான?—எனக்குத் தெரியாது

த:- இதன் பின் அநேகர் அங்கு வந்து குழுமினர்; நீயும போய் விட்டாய்!—ஆம்

த: போத்தல துண்டுகளைக் கண்டாயா?—நான் அவ்விடத்தில் நிற்கவுமில்லைத் துண்டுகளைக் காணவுமில்லை.

த: எதிரி எந்தக்கையில போத்தலைக் கொண்டு வந்தான்? — எனக்குத் தெரியாது-

த: வெள்ளைப் போத்தல் என்றது நிச்சயமாகத் தெரியுமா?—ஆம.

த: இராமலிங்கம் கறுத்தப்போத்தல் என்று சொல்லுகிறான்? — எனக்குத் தெரியாது.

த: அது கறுத்தவெள்ளைப் போத்தலாய் இருக்காதா?—இல்லை.

மேலவிசாரணை இனிய நடைபெறும் விபரம் அடுத்த பத்திரிகையிற் பார்க்க.

## கிழயானை சுடப்பட்டது

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு மாகாண ரிஜிஸ்திரார் ஆபீசைச் சேர்ந்த திரு ஏ. எச். கே. ராமநாதனும் அவருடைய நண்பர் திரு என். எட்வர்ட்ஸும் நேற்றுக்காலை சுமார் 14 அடி உயரமுள்ள ஒரு போக்கிரியானையைச் சுட்டுக்கொன்றனர். திரு ராமநாதன் இதற்குமுன் ஒரு யானையைச் சுட்டுக் கொன்றிருக்கிறர். பிரஸ்தாப யானை சுமார் ஒரு வாரத்துக்குமுன் ஜாயலையைச் சேர்ந்த நீர்ப்பாசன ஓவர்சியர் எஸ். ஜீ. வி. பேர்னுண்டோ என்பவரைக்கொன்றுவிட்டது. மேலும் அருணாசலம் என்ற ஒரு கண்டிராக்டரையும் அது காயப்படுத்தியது. மேற்கூறிய இருவரும் சைக்கிளில் வரும்போது யானை அவர்களைத் துரத்தியதாம்.

அன்றியும், பிரஸ்தாப யானை மட்டக்களப்பு-பதுளை ரோட்டிலுள்ள புத்தூர் முதலிய கிராமப் பகுதியைச் சேர்ந்தஜனங்களுக்கு மிகுந்த தொல்லையை விளைவித்ததுமன்றி புன்செய்ப் பயிர்களையும் அழித்தது. திரு பேர்னுண்டோ கொல்லப்பட்ட இடத்துக்கு அது அநுதினமும் வந்து போய்க்கொண்டிருந்ததாம்.

சென்ற சனிக்கிழமை திரு. ராமநாதனும் அவரது நண்பரும் துப்பாக்கிகளுடன் யானையைத் தேடிப்புறப்பட்டனர். ஆனால் அன்று காற்றுப் பலமாக வீசியதனால் யானையின் அடிச்சுவடுகள் மணலால் மூடப்பட்டு விட்டன. ஆகவே யானையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அன்றிரவு, அந்தயானை திரு. பேர்னுண்டோ கொல்லப்பட்ட இடத்துக்கு வந்து போனதாக நண்பர்களுக்குத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் நேற்றுக்காலை அவர்கள் புறப்பட்டனர். சுமார் முக்கால் மைல் தூரம் காட்டுக்குள் சென்றதும் மரங்களடர்ந்த புதரில் அந்த யானையின் முதுகு காணப்பட்டது. இருவரும் யானை நின்ற இடத்துக்குச் சுமார் 25 யார் தூரத்தில் நின்றுகொண்டு குறி பார்த்து ஐந்து முறைசுட்டனர். யானை சுருண்டு விழுந்தது. அது மிகவும் வயதான யானையென்று சொல்லப்படுகிறது.

வண்ணைநகர்

தையல் நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

திருவூஞ்சல்

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5

மானேஜர்,

சைவப்பிரகாசயந்திரசாலை,

வண்ணார்பண்ணை.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஹு
ஆனிமீ ௩0உ திங்கட்கிழமை

## யாழ்ப்பாணத்தில் நல்ல பசுப்பால் வேணும்

இக்காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினத்திலே விலைப்பால் வரவர அதிகஞ் செலவாகின்றது. சிறு குழந்தைகளுக்குத் தாய்ப்பால் பெரும்பான்மையும் இன்மையாலும், இருந்தாலும் பெற்றவள் அதனைத் தன் குழந்தைக்கு ஊட்டுவது அநாகரீகமென்று பேய்த்தனமாய் நினைக்கத் தலைப்பட்டுவிட்டமையினாலும் அக்குழந்தைகளும் மேலை நாட்டுப் பாலாகாரங்களையும் ஆவின்பாலையும் குடித்தே வளரவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். "பீரம்பேணிபாரந் தாங்கும்" என்னும் முதாட்டி வாக்கியத்தை நம் நாட்டிலுள்ள தாய்மார் அறவே மறந்துவிட்டனர் போலும். இப்படி, பசுவின் பாலே இங்குள்ள குழந்தைகளுக்கும் நோயாளர் விருத்தர் பெலனற்றார் முதலியோருக்கும் இன்றியமையாத ஆகாரமாகவிருக்கும்போது, இங்கே அதிகத்தொகையாகக் காலையிலும் மாலையிலும் உதவப்படும் விலைப் பசுப்பால் சுத்தமானதோ தண்ணீர் கலக்கப்படாததோ என்ற இவைகளைப்பற்றி அதிகாரிகள் ஆராய்தலும், ஆராய்ந்து கலப்புப்பால் உதவுவோரைக் கடிந்து தண்டித்தலும் ஆவசியகஞ் செய்யவேண்டியவையல்லவா?

இப்பட்டினத்திலே சரிக்குச்சரி தண்ணீர் கலந்து விற்றல் கோதுமைக்குருணையைப் பிசைந்து பாலேடுத்து அதனைச் சேர்த்து விற்றல் ஆட்டுப்பாலை மாட்டுப்பாலோடு கலந்து விற்றல் முதலிய பிழைகளெல்லாம் நடைபெறுகின்றன. இப்படியாகக் கலப்புப்பால் விற்கப்படினும் இங்குள்ளார் அதனைத் தள்ளாது வாங்கி உபயோகிக்கவேண்டிய நிலைமையிற் றானிருக்கிறார்கள். காரணமென்னையெனில் இப்பட்டினவாசிகள் எவரும் தத்தம் போறப்பில் ஒரு பாற்பசுவையேனும் வைத்து வளர்த்தற்கான வசதிகள் எவையும் இல்லாமையேயாகும். இந்தப் பெரிய பட்டினத்திலே பசுக்கள் யதேச்சையாகப் புல மேய்வதற்கான விஸ்தாரமுள்ள ஒரு பசும் புற்றரை இற்றை வரையில் இல்லை. சுகாதார முறையை அநுசரித்துள்ள பசுத்தொழுவமேனும் பாற்சாலையேனும் இல்லை. பசுமாட்டிற்குரிய உணவுப்பொருள்கள் மலிவாக விற்கப்படுதலுமில்லை. கட்டோடு நிற்கும் மாடுகள் சிறிது உலாவிக் காலாறுதற்கும் புல் மேய்தலைப்பற்றிய ஞாபகத்தை அந்த மாடுகளுக்கு உண்டாக்குதற்கும் இதுகாறும் இடமாகவிருந்தது யாழ்ப்பாணம் முற்றவெளி. அந்த முற்றவெளியிலும் முக்காற்பங்குக்கு மேற்பட்ட பாகம் பட்டினபரிபாலனசங்கக் கட்டிடமாகவும், பந்தடிப்போர் இளைப்பாறும் கட்டிடமாகவும், பள்ளிக்கூடப்பிள்ளைகள் விளையாடும் இடமாகவும் மாறிவிட்டது. ஆதலால் முற்றவெளிக்கு மாடுகளை இனிமேற் கொண்டுபோகவேண்டிய ஆவசியகம் இல்லையாகும்.

இப்படியானவசதியீனங்கள் இங்கு இருப்பதனாற்றான் இப்பட்டின வாசிகள் ஆனைக்கோட்டை கோக்குவில் முதலாம் அயற்கிராமங்களிலிருந்து பசுவின் பாலை விலைக்குப்பெற்றுக் கொள்ளுகிறார்கள். இந்த விலைப்பாலோ மேலே சொல்லப்பட்ட கலப்புக்களோடும் அசுத்தங்களோடுங் கூடியுள்ளன. கொழும்பு முதலிய பட்டினங்களில் நகரசங்கத்தார் சுத்தமான பாலையே விற்றல் வேண்டுமென்று பால்வியாபாரிகளைக் கட்டுப்பாடு செய்வது போல, நமது பட்டின சங்கத்தாரும் பால் விற்போரை இங்கே பெரிதுங் கட்டுப்பாடு செய்தல் வேண்டும். பால்விற்போர் எவரும் பட்டினசங்கத்தின் அநுமதியை வேண்டிய காலத்திற்குப் பெற்றுக்கொண்டே பால் விற்றல்வேண்டும். பால் விற்போர் அதிகமாகச்சஞ்சாரம் செய்யும் சந்திகளில் நமது பட்டின சங்கச்சுகாதாரப் பரிசோதகர்கள் காலையும் மாலையும் நின்று நின்று பால்சோதிக்குங் கருவி கொண்டு பட்டினத்துட்கொண்டு வரப்படும் பாலைப் பரிசோதித்துக் கலப்பெனக் கண்டால் அவரைத்தண்டனைக்குள்ளேனும் அபராதத்தினுள்ளேனும் ஆக்குதல் வேண்டும். நமது பட்டினப்பிதாக்கள் இப்பட்டினத்திலே வருவாய்க்குரிய வேறு எத்தனையோ கருமங்களிற் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இவ்விஷயத்திற் சிறிது சிரத்தை பூணவொண்ணாதா?

## பாலஸ்தீனக் கலகநிவாரணம்

பிரிட்டனுக்கு அபிஸீனியா விஷயம் எவ்வளவுக்குத் தொந்தரவை அளித்ததோ அதினும் அதிகமான தொந்தரவைப் பாலஸ்தீனக் கலகம் அளிக்கின்றது. அராபியர் தேசாபிமானத்தால் தூண்டப்பெற்றவராய் ஆவேசங் கொண்டு எழுகின்றனர். அவர்கள் எழுச்சியைத் தடுத்தற்குக் கடுமையான நடவடிக்கைகள் கையாளப்பெற்று வருகின்றன. பாலஸ்தீனக் கலகம் ஆரம்பித்து மூன்று மாதங்களாகின்றன. இன்னும் அங்கு கிளர்ச்சி சிறிதும் அடங்கின பாடில்லை. ஆயின், நாளுக்குநாள் நிலைமை மிக நெருக்கடியாகவே மாறிக்கொண்டு வருகிறது என்பது மாத்திரம் நிச்சயம். பாலஸ்தீன அராபியருக்கு அகில அராபியர் மகாசங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக இருக்கிறது. பாலஸ்தீனம் சம்பந்தமாக, பிரிட்டிஷார் கொண்டுள்ள கொள்கை மாறும்வரை, தாம் எவ்விதமும் போராடியே தீரவேண்டும் என்று அச் சங்கத்தார் தீர்மானித்துவிட்டார்கள். பிரிட்டிஷ் மந்திரியாரோ பாலஸ்தீனத்திற் குழப்பம் யாவும் ஒழிந்து அமைதி நிலவிய பின்னரே செய்யத்தக்கது எது என்பதைப் பற்றி பிரிட்டிஷ்அரசாங்கம் ஆலோசிக்கும் என்று தெரிவித்துள்ளார். ஆகவே, அகில அராபியர் மகாசபை எதிர்பார்க்கும் மனமாறுதல் இப்போதைக்குப் பிரிட்டிஷாருக்கு ஏற்படும் என்றும் கூறுவதற்கில்லை.

அராபியர் தமக்குச் சொந்தமாகக் கருதி வாழும் ஒரு நாட்டில் அங்கு வந்து குடியேறும் யூதர்கள் தமது உரிமைகளைப் பறிமுதல் செய்ய இடமளிக்கக் கூடாதென்பதே அவர்கள் கூறும் நியாயமாகும். இதுவே அங்குள்ள கிளர்ச்சிக்கும் முக்கியகாரணமாகும். ஆகவே, அராபியர்களுக்குள்ள இந்த அதிருப்தியைப் போக்குவதே கலகத்தை நிறுத்துதற்கு வழியாக இருப்ப, அதனை விடுத்து, "விசாரணைக் குழுவை அனுப்புகிறோம்; விசாரணைக் குழுவை அனுப்புகிறோம்" என்றால், எவர் தான் மனஞ் சகிக்க முடியும்? பசியால் வருந்தும் ஒருவனுக்குப் பட்டியிலுள்ள பழவகைகள் பசிதீர்க்குமா? எதற்கும் ஒரு விசாரணைக் குழுவை அனுப்புதல் பிரிட்டனைப் பிடித்துள்ள ஒரு நிராகோய் போலத் தெரிகிறது. 1921-ம் ஆண்டு தொடக்கம் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்திற்கு அடிக்கடி விசாரணைச் சபையாரை அனுப்பிவந்தனர். அவற்றால் அடைந்த பலனோ ஒன்றுமில்லை. இதுவரை, எவ்வித நிர்க்கமான தன்மையையுங் காணாத அராபியர்க்கு இன்னும் "விசாரணைக் குழுவை அனுப்புகிறோம், கலகத்தை விடுங்கள்" என்றால் அவர்கள் அதன்மீது வெறுப்புக் கொள்ளுதல் நியாயமேயாகும். ஆகவே, பாலஸ்தீனத்தில் அமைதி நிலவவேண்டுமாயின், பிரிட்டிஷார் தமது கொள்கையை மாற்றவேண்டியது அத்தியாவசியமாகும்.

யூதர்களைப் பாலஸ்தீனத்திற் குடியேற அநுமதிப்பதாக பிரிட்டிஷார் வாக்களித்ததன் பலனாகப், பாலஸ்தீனத்தில் யூதர்கள் மிக அதிகமாகக்குடியேறினா. அதனால் அராபியரும் சிறிது சிறிதாகத் தமது நாட்டை இழந்தே வரலாயினர். ஆயின், இப்போதோ, இன்னும் இதற்கு இடமளிக்கக் கூடாதென்ற உணர்ச்சி அவர்களுக்கு உண்டாகிவிட்டது. அன்றியும், ஸிரியா, எகிப்து முதலிய இடங்களில் தேசிய உணர்ச்சி உண்டுபட்டதன் பலனாக அவ்வந்நாசிகள் சுதந்திரம் பெற்ற வரலாறும் பாலஸ்தீன அராபியருக்கு ஒரு வழி காட்டியாயிற்று. இம் முன்மாதிரியைப் பின்பற்றி உழைப்பின் தாமும் சுதந்திரம் பெறலாம் என்ற உணர்ச்சியும் அவர்கட் கேற்பட்டிருக்கின்றது. ஆகவே, தேசிய உணர்ச்சியால் உந்தப்பெற்றுப் போராடும் இவர்களைப் பிரிட்டிஷார் பிரங்கியும் படையுங்கொண்டு அடக்கமுயலின், அங்கு இரத்த ஆறன்றோ ஊற்றெடுக்கும். அதுவேயுமன்றி, பிரிட்டிஷார் அங்கு கையாளும் முறை நீதியோடு கூடியதோ அல்லவோ என்பதை ஏனைய நாட்டினரும் அவதானித்தே வருகின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் முஸ்லிம்கள் தொகை அதிகம். இவர்களுக்கு இயல்பாக அராபியர்மாட்டே அநுதாபமும் அபிமானமும் ஏற்படும். தேசாபிமானத்தோடு மதாபிமானமும் சேருமாயின் நிலைமை இன்னும் நெருக்கடியாக மாறும். ஆகவே அவ்விதம் நேரிடாமல் தடுப்பது பிரிட்டிஷாரது தலையாய கடனாகும். தாம் யூதர்களுக்களித்த வாக்குறுதியை நீக்குவதா அல்லது அராபியர் நியாயத்தின்படி கோருவதை அளிப்பதா என்பதைப் பிரிட்டிஷாரே தீர்மானித்துக் கோடல்வேண்டும். அராபியர் வேண்டுகோள் எவர் மனச்சாட்சிக்கும் ஏற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. ஆகவே பிரிட்டிஷார் அராபியரது வேண்டுகோளை அளிப்பதனால் நீதியையும் செய்தவர்களாகின்றனர். இதனை பிரிட்டிஷார் செய்வார்களா?

## புருஷன்மீது மனைவி வழக்கு

### கோட்டில் ருசிகரமான விசாரணை

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற வியாழக்கிழமை உதவி நீதிபதி திரு. C. P. de. சில்வா முன்பாகக் கொக்குவிலில் வசிக்கும் செல்லப்பா பெண் செல்லம்மா தனது பிள்ளைகள் தன்னுடன்தான் இருக்க வேண்டுமென்றும் புருஷனுடன் இருக்கக்கூடாதென்றும் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வாதிபக்கமாக திரு கே. வி. சின்னத்துரையும் பிரதிவாதிபக்கமாகத் திரு. ஆர். கண்ணுத்துரையும் வாதித்தனர். வாதியாகிய செல்லம்மா கூறியதாவது:—

"இவர் என்னுடைய புருஷன். 9 வருஷங்களுக்கு முன் நான் இவரை விவாகஞ்செய்தேன். அப்போது அவர் சிங்கப்பூரில் உத்தியோகமாக இருந்தார். எனக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. அவர்கள் பெயர்கள் முறையே பூபாலசிங்கமும் சுந்தரியும், நாங்கள் சிங்கப்பூரில் இருக்கும்போது மிகவும் ஒற்றுமையாக இருந்தோம். அவருடைய சம்பாத்தியம் அவருக்குக் குடிப்பதற்கே பற்றாது. சிங்கப்பூரில் 5 வருஷம் இருந்தோம். குடி மிகுதியினாலேயே அவர் உத்தியோகத்தையும் இழந்தார். சிங்கப்பூரிலும் அவர் என்னை அடிக்கிற வழக்கமுண்டு. அங்கே 5 அல்லது 6 நாட்களுக்கொருமுறை எங்களுக்கிடையே சண்டை நடக்காமல் விடாது. மூன்று வருஷத்துக்கு முன்னரே நாங்கள் சிங்கப்பூரால் வந்தோம். இங்கேயும் பிரதிவாதி எனக்கு அடித்தார். அவர் என்னுடைய நகைகள் எல்லாவற்றையும் கழற்றி விற்றுப் போட்டார் எனது தாலிக் கொடியைக்கூட விற்றுப்போட்டார். எனக்கு அநேகமாகக் காணிகளே சீதனமாகத் தரப்பட்டன. அவர் சிங்கப்பூருக்குப் போகும்போது அவற்றை ஈடுவைத்தார். ஈட்டுக்காரன் சிலகாலம் சென்றபின் சித்தார்த்தான். எனது சகோதரி அவர்களுக்கு இன்னும் அதிகமான பொறுப்பைக் கட்டி அவற்றைவிற்க விடாமல் தடுத்தான். 400 க்கு ஈடுவைக்கப்பட்டது. வட்டியும் 400 வந்துவிட்டது பிரதிவாதி பிள்ளைகளையும் என்னுடன் விட்டுவிட்டுச் சிங்கப்பூரில் 1½ அல்லது 2 வருஷம் இருந்தார். அந்நாட்களில் ஆக இருமுறைகளிற் காசு 22 ரூபா அனுப்பி இருந்தார். அவர் போகிறதற்கு (சிங்கப்பூருக்கு) நான் எனது தையல் யந்திரத்தையும் விற்றும் வேறு கடனுக வாங்கியும் கொடுத்த ரூபா 120 அவர் அதைக் கூடத் திருப்பித் தரவில்லை. சிங்கப்பூரால் 7 மாசங்கட்கு முன்னரே திருமபிவந்தார். வந்தும் சில நாட்களுக்கு என்னுடன் இருந்தார் அவர் குடிக்கக் காசுகேட்டார், நான் இல்லையென்று சொன்னேன். அதனால் என்னை அடித்துவிட்டுப்போய் விட்டார். நான் எனது சகோதரி சின்னம்மா கந்தரோடையில் சுகயீனமாக இருந்தபோது பார்க்கப் போயிருந்தேன். அப்போது நானில்லாத நேரத்தில் வந்து பிள்ளைகளை அழைத்துச் சென்றுவிட்டார். அவருக்கு வீடு இல்லை. அவர் குடித்துவிட்டுச் சட்டி பானைகளை உடைத்து வீட்டுக்கு நெருப்பும் வைத்தார் அல்லாமலும் பெட்டிகளைப் பலவந்தமாக உடைத்துத் துணிகளுக்கும் நெருப்பு வைத்தார்.

எனது தகப்பனும் சகோதரனும் தான் என்னையும் பிள்ளைகளையும் காப்பாற்றினார்கள்

குறுக்கு விசாரணையின் போது சாக்ஷி கூறியதாவது:—

இவரை விவாகம் செய்யமுன் எனக்குத் தெரியாது. இவர் குடிக்கிறவர்; இவர் எனக்குத் தூரத்துச் சொந்தக்காரன். என்னை விவாகஞ் செய்வதற்கு நான்கு நாட்களுக்கு முன் எனது வீட்டில் வந்து சாப்பிட்டார். அப்போது இவர் யாரென்று எனக்குத் தெரியாது. எங்கள் விவாகம் சடுதியாக முடிந்தது; அவருடைய இனத்தவர்கள் விவாகத்திற்கு வந்தார்கள். அவர்கள் கோபித்துக்கொண்டு வரவில்லை என்றதை நான் மறுக்கிறேன்.

சிங்கப்பூரால் வந்தும் என்னுடன் சண்டைபிடித்துக்கொண்டார். சிங்கப்பூரில் இவர் ஸ்டேசன்மாஸ்றராக இருந்தார். இவருக்கு வேறு வருவாய் கிடையாது. நான் அவருடன் கூட இருந்த 5வருஷகாலமும் என்னைக் கெடுமாகத்தான் நடாத்தினர். நான் எனது விதி இப்படியாகப்போய்விட்டதே என நினைத்துப் பொறுமையாக இருந்தேன். என் இனத்தவர்கள் இதை அறிவார்கள். நான் சிங்கப்பூருக்குப்போனபோது என்னுடன் எனது தாயாரும் வந்தார். எனது தகப்பனர் சுட்டுநிறவர் பிரதிவாதி உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டபோது நன்கொடையா (gratuity) க 775 டலர்கள் கொடுக்கப்பட்டனர். நாங்கள் சிங்கப்பூரிலிருந்து வந்ததும் ஒருவருஷகாலம் எங்கள் வீட்டில் இருந்தோம் பின் அவர் வீட்டில் சிறிதுகாலம். இருந்தோம். அவர் சன்னகத்திலோர் தேநீர்க்கடை நடத்துகிறவர். இக்கடை இராசாவினுடைய கடை. இராசாவை எனக்குத்தெரியாது. நான் கடைக்குப் போகிறதில்லை. நான் இவற்றையெல்லாம் மற்றவர் மூலம் அறிந்தேன். இராசாவின் விவாகத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இராசாவைவிட்டு நாங்கள் சண்டைபிடிக்கவில்லை. ஒரு நாள் அவர் வந்து எனக்கு அடித்து எனது சட்டையையும் கிழித்தார். எனதுமாமன் அவரைத் தள்ளிவிட்டு ஓர் கார்கொண்டுவந்து என்னைக் கொக்குவிலுக்கு அனுப்பினர். விதானையார் அநேக நாட்களில் அவரை இவருடைய நடத்தையைக் குறித்துவைத்தார். எனக்குக் காயங்கள் இருந்தன. நான் ஒருவருக்கும் இக்காயங்களைக் காட்டவில்லை நான் காயங்களுக்கு மானிப்பாயில் தான் சிகிச்சை செய்வித்தேன். எனக்குச் சின்னத்துரையைத் தெரியாது. இவ்விரு காகிதங்களும் என்னால் தான் எழுதப்பட்டவை. இவை எனது புருஷன் சிங்கப்பூரில் இருந்தபோது எழுதப்பட்டவை. சின்னத்துரை ஒரு வைத்தியர். எனக்கு அவர் வைத்தியம் செய்யவில்லை. பிரதிவாதியும் சின்னத்துரையும் எனது வீட்டில் சண்டையிட்டபோதுதான் நான் சின்னத்துரை என்பவரை முதன்முதற் சந்தித்தேன். நாங்கள் (சின்னத்துரையும்) இருவரும் படுக்கையறையில் இருக்கவுமில்லை. புருஷன் வந்ததால் நிடுக்கிடவுமில்லை. நான் இப்போது கந்தர்மடத்தடியில் வசிக்கிறேன். கொக்குவிலில் எனது வீட்டுக்கு மற்றவர்கள் கல்லெறிந்தனர். வேலிக்கு நெருப்பு வைத்தனர். இத்தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல்தான் கந்தர் மடத்தடிக்குச் சென்றேன். எங்களைச் சமாதானப்படுத்த மற்றவர்கள் வந்தார்கள். நான் சமாதானமாக மறுத்துவிட்டேன். அதனாலேயே இப்படி எல்லாம் செய்தார்கள். வீரசிங்கி இப்போது என்னுடன் இருக்கிறான் என்பதை நான் மறுக்கிறேன்; வீரசிங்கி எனது பெற்றாருடன் இருக்கிறான்

இதன்பின் பிரதிவாதி விசாரிக்கப்பட்டார். அதன்பின் மேல்விசாரணை 14-7 36 க்குத் தவணையிடப்பட்டது.

## கொப்பரா விலையேற்றம்

ஜூலை 9 உ—

நேற்றைய ஏல விற்பனையில்கொப்பராவின் உயர்ந்தவிலை கண்டி ஒன்றுக்கு 54 ரூபாயாக இருந்தது. மத்திய விற்பனை ஸ்தலம் திறக்கப்பட்டது. இலங்கைக் கொப்பரா இவ்வளவு உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். இதற்குமுன் ரூபா 50 அதிகமாக போனக கொப்பராக் குவியல்கள்தான் விற்பனையாயின,

# 8 வயதுச் சிறுமியோடு சேட்டையா?

## விசாரணையின் பின் எதிரிக்கு விடுதலை

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் ஆகதம் வழக்காகக் கந்தரோடையில் வசிக்கும் வேலுப்பிள்ளை—சின்னத்துரை என்னும் வாலிபன் நல்லூர் திருநாவுக்கரசுவின் மகளாகிய 8வயதுச் சிறுமி சிவபாக்கியமென்பவளைச் சட்ட விரோதமாகத் தேகசம்பந்தஞ் செய்தானெனக் குற்றஞ்சாட்டிய வழக்கு நீதியரசர் திரு. F. J. சூற்ஸ் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

வழக்காளிசார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. A. H. R. வீரசூரியாவும் எதிரிசார்பாக திரு S. D. தப்புவும், T. C. இராசரத்தினமும் வாதித்தனர்.

முடிக்குரிய நியாயவாதி கூறியதாவது:—

எதிரி சிவபாக்கியத்தின் சகோதரன் சிங்கராசாவிடம் சிவபாக்கியத்தை அழைத்துவரச்சொன்னான் அவன் அவளைக் அழைத்துக்கொண்டு எதிரி வீட்டுக்கு வந்தான் சிவபாக்கியம் செல்லையா என்பவருடைய வீட்டில் நின்றாள். எதிரி சிங்கராசாவிடம் காசு இரண்டுசதம் கொடுத்துப் புகையிலையும் நூலும் வாங்கி வரும்படி கூறினான். அவன் அதற்காகப் போய்விட்டான். எதிரி அவளை வீட்டு அறைக்குள் அழைத்துச்சென்று தேகசம்பந்தஞ் செய்தான். சிங்கராசா கடையால் திரும்பிவந்தபோது எதிரியும் சிவபாக்கியமும் விறாந்தையில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தனர். தகப்பனார் முழுகக் கூட்டிக்கொண்டுபோய் முழுகவார்க்கும்போது சில அடையாளங்களைக்கண்டு மகளை வினவினார். அவள் பாதம் சொல்லவில்லை. அதன்பின் தகப்பன் மகளை அடித்தார். அடி விழுந்தபின் மகள் நடந்த தவற்றைச் சொன்னாள்.

டாக்குத்தர் திரு. K. இராசா, திருநாவுக்கரசுவின் மகள் சிவபாக்கியம், சிங்கராசா முதலியவர்கள் சாட்சியம் கூறியபின் எதிரியை நீதிபதி விடுதலைசெய்தார்.

---

## அறிவித்தல்

இதனுல் சகலரும் அறிவது அனந்த நாராயண ஐயர் தம்பி ஐயாகிய நான் 1890ம் ஆண்டு ஆவணிமீ 15 திகதி முதல் 1935ம் ஆண்டு புரட்டாதிமீ 23உ வரையும் வட்டுக்கோட்டை மேற்கு தேவிலைடைப்பிராய்க் கந்தசுவாமி கோவிலில் பூசகராக இருந்தேன். இப்படி இருந்த காலத்தில் நான் குடியிருப்பதற்கு இ. இ. முதலியார் வைத்தியலிங்கர் என்பவரிடம் நீர்தைசிட்டி என்னும் வளவில் இரண்டரைப் பரப்பை விலைக்கு வாங்கினேன். இந்த உறுதியை எழுதியவர் வட்டுக்கோட்டையில் பிரசித்த நொத்தாரிசுவாகஇருந்த ஆறுமுகம் சிவசிதம்பரப்பிள்ளை என்பவர். இந்தவளவில் வீடுகட்டிக் குடியிருந்தேன். 1914ம் ஆண்டில் இதை நானும் என் மனைவியும் நன்கொடையாக எனது மூத்த மகனுக்குக் கொடுத்தோம். அவர் தனது சகோதரர்க்கும் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறர். சில தொந்தரவினுல் 1935ம் ஆண்டு புரட்டாதிமாசம் 23ந் திகதியின்பின் வண்ணார்பண்ணையில் வந்து குடியிருக்கிறேன். இங்கு வந்தபின் எனது வீடுவளவைப் பிள்ளைகள் மனம் பொருந்திய வெந்நிசில் விற்கமுயன்றனர். இச் சமயத்தில் வட்டுமேற்கில் இருக்கும் கந்தப்பர் நாகலிங்கம் என்பவர் எனது வீடும் வளவும் கோவிலுக்குரியது என்றும் அதனைக் கள்ளமாக விற்க முயலுகிறேம் என்றும் வடமாகாண ஏசண்டருக்குப் பெட்டிசம் இட்டார். இந்தப் பெட்டிசத்தை வண்ணார்பண்ணை உடையார் விசாரித்த போழது வளவிற்குரிய சாதனங்களெல்லாம் காட்டியதனுல் பெட்டிசம் உண்மையானதல்ல என்பது நிலைநாட்டப்பட்டது. மேற்கூறிய நாகலிங்கம் என்பவர் என்மீது கொண்ட கோபத்தினுல் ஊரிலும் எனது வளவு கோவிலுக்குரியதென்று பொய்க்கதை பரப்புகிறரேயன்றி உண்மையில் வீடும் வளவும் எனது பிள்ளைகளுக்கே உரியது. இதனை வாங்கவிரும்புகிறவர்கள் மேற்கூறிய நாகலிங்கத்தினுடைய அலுப்பிற்கு எடுபடா திருப்பார்களாக.

இங்ஙனம்,
அ. தம்பிஐயர்.

(Mis. 79. 13-7-36.)

---

# அடித்ததாக வழக்கு

## எதிரிக்கு அபராதம்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் உதவி நீதிபதி திரு. C. P. de சில்வா முன்பாக, பெரிய கடையில் சர்வத்துக்கடை வைத்திருக்கும் (புங்குடுதீவிலுள்ள) எஸ். செல்வத்துரை என்பவரை (1) பீற்றர் (2) சுந்தையா (3) சிற்சேசு ஆகிய மூவரில் 1-ம் எதிரி அடித்ததாகவும் 2-ம் 3-ம் எதிரிகள் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. வழக்காளியாகிய செல்வத்துரை தெரிவித்ததாவது:—

நான் பெரிய கடையில் சர்வத்துக் கடை வைத்திருக்கிறேன். 1ம் எதிரி என்னிடம் வந்து சர்வத்துக் கேட்டார். நான் காசைக் கேட்டேன். அவர் காசு இல்லை என்றார். நானும் சர்வத்துக் கொடுக்க மறுத்தேன். அவர் எனக்கு அடித்தார். அடித்து விட்டுக் கடையிலிருந்த போத்தல்களை உடைத்தார்; மற்றைய இருவரும் அவரோடு சேர்ந்து வந்தார்கள். அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. நீதிபதி எதிரிக்கு 20ரூபா அபராதம் விதித்தார். வழக்காளியின் நட்டத்துக்கு அதில் 5 ரூபாவைக் கொடுக்கச் சொன்னர்.

---

## டிக்கட்டில்லாமற் பிரயாணம்

### எதிரிக்கு 10 ரூபா அபராதம்.

சென்ற 10-7-36 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் நல்லூரில் வசிக்கும் கந்தசாமி திருநாவுக்கரசு என்பவன் கொழும்பிலிருந்து டிக்கட்டில்லாமல் 3ம் வகுப்புப் புகைவண்டியிற்பிரயாணஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டதன்பேரில் எதிரி 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

---

# நான்கு கோரக் கொலைகள்

## சத்தமிட்ட சாமியாரும் கொல்லப்பட்டார்

மதுரை, ஜூலை 18—

ராமனுதபுரம் ஜில்லாவில் திருப்பத்தூருக்கு அருகிலுள்ள ஆவணிப்பட்டியில் நேற்றுமுன்தினம் இரவு 4 கோரக் கொலைகள் நடந்திருக்கின்றன.

ஒரு அகம்படியக் குடும்பத்தின் தலைவர், அவர் மனைவி, அவர்கள் மகள் ஆகிய மூவரும் ஒரு சாமியாரும் கொலையுண்டு விட்டார்கள்.

சாமியாரும் பிரஸ்தாப அகம்படியரும் சாலையில் இரண்டு தண்ணீர்ப் பந்தல்கள் நடத்தி வந்தார்களாம். அந்த இடத்தில் இரண்டே இரண்டு வீடுகள் தான் இருக்கின்றன. இதர வீடுகள் இரண்டு பர்லாங்குகளுக்கு அப்பால் உள்ளன.

திங்கட்கிழமை பாதிராத்திரியில், யாரோ வீட்டுக்குள் அகம்படியர், அவர் மனைவி, மகள் ஆகிய மூவர் தலைகளையும் வெட்டிக் கொன்றுள்ளார்கள். இதையறிந்த சாமியார் சத்தமிட்டார். உடனே அவரும், அகம்படியர் குடும்பத்தினர் கதியையே அடைந்தார்.

திருப்பத்தூர் போலிசார் துப்பு விசாரித்து வருகிறார்கள்.

இந்தப் பயங்கரமான கொலை விபரம் நேற்றுத்தான் தெரிந்தது. தண்ணீர்ப்பந்தலுக்கு நீர் அருந்தச் சென்ற வழிப்போக்கர்கள் தலையற்ற காலு முண்டங்களைக் கண்டதும் நடு நடுங்கிப் போனார்கள் உடனே விஷயத்தை ஊராருக்குத் தெரிவித்தார்கள்.

---

# தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு வீரவுணர்ச்சி

## சங்கராச் சாரியர் சொற்பொழிவு

பம்பாய், ஜூன், 18—

நேற்றிரவு நடந்த மகாராஷ்டிர பத்திராதிபரான ஸ்ரீ எ. பி. கோலத்கெர் வருஷாப்திகக் கொண்டாட்டத்தை யொட்டி நேற்று நடந்த கூட்டத்தில் காவீரபீடம் சங்கராச்சாரியான டாக்டர் கூர்த்தகோடி பேசினார். அவர் கூறியதாவது:—

"தற்கால ஹிந்து லட்சணத்தின்படி எவரும் உண்மை ஹிந்துவாகவே இருக்க முடியாது. இப்படியே இதர மதத்தினரும் சகல மதங்களின் ஸ்தாபகர்களும் மகான்களே. ஆனல் அவர்களது போதனை அவர்கள் ஜீவித்திருந்த காலத்திற்கே ஒத்திருந்தன. எல்லா மதங்களின் சாராம்சமும் ஒன்றும்; அது எக்காலத்திற்கும் பொருத்தமானது அந்த மகான்களின் போதனைகளை அனுசரிப்பதில் நாம் தக்க மாறுதல்கள் காணவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சங்கடம் விளைவது நிச்சயம்.

சீக்கியர் மகாநாட்டிற்கு நான் செய்தி அனுப்பியது பற்றி என்மீது குறை கூறுகின்றனர். நான் சீக்கியர் மதம் தழுவி, அப்பொழுது கூட என்னை ஒரு ஹிந்துவென்றும் சங்கராச்சாரி என்றும் சொல்லிக்கொள்வேன். மதமாற்றமானது எளிதான காரியமல்ல. மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று சனாதனிகள் கூச்சல் போடுவதையும், சனாதனிகளின் கூச்சலால் ஆதி ஹிந்துக்கள் மனச்சோர்வடைந்திருப்பதையும் நான் கண்டிக்கிறேன் ஹரிஜனன் என்ற புதிய வார்த்தை தவறுனதும் தப்பான அர்த்தம் உண்டுபண்ணத் தக்கதுமாகும்.

தங்களது உரிமைகளுக்காகப் போராடத் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு வீரவுணர்ச்சி ஏற்படும்படி செய்யவேண்டுவதே இப்பொழுது மிக்கஅவசியமாகும். இந்நோக்கத்துடன் புதிய சமயமொன்று ஏற்படுத்தவோ அல்லது சீக்கியர் மதம் தழுவவோ பம்பாய் மஹார ஜாதியினர் தீர்மானித்திருப்பதை நான் வரவேற்கிறேன்."

---

## அயல்நாட்டு மந்திரிக்கு ஓய்வு

ரக்பி ஜூலை 7—

பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி திரு. அந்தோனி ஈடன் தமது டாக்டரின் யோசனையின்படி ஒருவாரம் வரையில் நாட்டுப்புறத்திலே ஓய்வெடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றார். அவர் லீவிலிருக்கும்பொழுது ஹாலிபாக்ஸ் பிரபு அயல்நாட்டு மந்திரியின் அலுவல்களைக் கவனிப்பார்.

திரு. ஈடனின் தேகாரோக்கியம் பொதுவாகத் திருப்திகரமாக இருக்கின்றதெனினும் அவருக்குச் சில தினங்கள் வரையிலாவது ஓய்வு அவசியமென்று சொல்லப்படுகிறது. பார்லிமெண்டின் ஈஸ்டர் விடுமுறையின் பொழுதே தாமும் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்று அவர் கருதியிருந்தார். ஆனல் வேலை நெருக்கடியின்காரணமாக அவ்விதம் செய்யமுடியாமற் போய்விட்டது.

---

## 5000 ஏக்கரில் அகில உலகம்

ருஷியா தேசத்தில் லெனின் கிராட் நகரத்தில் பள்ளிப்பிள்ளைகள் பூமி சாஸ்திரம் எளிதில் படிப்பதற்காக ஒரு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறர்கள். ஒரு மலையடிவாரத்தில் ஐயாயிரம ஏக்கர் பூமியைச் சிறிய பூலோகமாகச் செய்கிறர்கள். அதில் ஒவ்வொரு தேசமும் மலைகளும், காடுகளும், கடல்களும் ஆறுகளும் ஏரிகளும் மற்ற இயற்கை அமைப்புகளுஞ்செயற்கையாகச் சிறிய அளவில் அமைக்கிறர்கள். சிறுவர்கள் பார்க் போன்ற இந்த இடத்தையெங்கும் சுற்றிப் பார்த்து உலக நாடுகளை ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

---

# காலி வெளிச்ச வீட்டில் தீ

## காவலாளி உயிர் துறந்தார்

## பலத்த சேதம்

காலி ஜூலை 8

காலி லைட்ஹவுஸில் இன்று விடியற்காலையில் திடீரென்று தீப்பற்றி லைட்ஹவுஸ் விளக்கு அதிகாலை 4 மணிக்கு அணைக்கப்பட்டது. லைட்ஹவுஸைக் கவனித்து வந்தவருக்குப் பலத்த காயங்களேற்பட்டுள்ளன. சேதமதிகமென்று கூறப்படுகிறது. எண்ணெய்த் தேக்கங்களுக்குத் தீபரவுமுன் அணைக்கப்பட்ட தென்றாலும், லைட்ஹவுஸ் சில தினங்களுக்கு வேலை செய்யாதென்றே தெரிகிறது. லைட்ஹவுஸ்கீப்பர் நாஸிரத் பேர்னுண்டோ இன்று காலை 10மணிக்கு ஆஸ்பத்திரியில் இறந்து போனர். மற்றுமிரு கீப்பர்கள் ஜன்னல்வழியாகக் குதித்துக் கயிறுகள் சங்கிலிகள் மூலம் தப்பினர்.

விடியற்காலையில் திடீரென்று கூச்சல் கேட்கவே அருகில் படுத்திருந்த மோட்டார் டிரைவர் எழுந்து லைட்ஹவுஸில் தீ சொழுந்து விட்டெரிவதைக் கண்டார். அவர் டாக்டர் அபயசூரியாவுக்குத் தகவல் கொடுத்துவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினர். டாக்டர் அபயசூரியா காயமடைந்தவருக்குப் பிரதம சிகிச்சை செய்து அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்.

---

## முஸ்லீமைக் குத்திய மலாய்க்காரி

பேரா மாகாணத்திலேயே ஒரு பெண்மீது கொலைவழக்குக் கொண்டுவரப்பட்டது இதுவே முதல் தடவையாகும். தைப்பிங்கில் வசித்து வந்த ஒருமலாய்க்காரி ஒரு இந்திய முஸ்லீமை கத்தியால் குத்திக்கொலை செய்து விட்டதாய்க் குற்றஞ்சாட்டி ஈப்போ அசைஸ் கோட்டில் 26உ விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது.

இக்கொலை சாட்டப் பெற்ற மாதின் புருஷனும், இறந்த முஸ்லீமும் பங்காளிகளாய் ஒரு சோற்றுக் கடை நடத்திவந்தனர். மலாய்க்காரி தன் புருஷனுடன் கடையிலேயே குடியிருந்து வருவது கூடாதென அம்முஸ்லீம் தடுத்தார் அதன்காரணமாய் தன் புருஷனுடன் அவள் வேறு ஒரு இடத்திற்குக் குடிபோய் விட்டாள். அவர்களுக்குச் சோறு மட்டில் கடையிலிருந்து தினசரி அனுப்பப்பட்டது.

ஒருநாள் அம் மலாய்க்காரி அக்கடைக்கு வந்தாள். அம்முஸ்லீம் அவள் வரக்கூடாதென இருந்தனர். அதனுல் கோபமுண்ட அவள் ஒரு கத்தியால் அவரைக குத்திவிட்டாள். 5நிமிஷத்தில அவர் இறந்துவிட்டார் உடனே இவள் நேடியாய்ப் பொலிஸிற்குப் போய்த் தான்குத்தியதாய்ச் சரண்புகுந்தாள். இவள் மிகவும் பலவீனப்பட்டிருப்பதின் காரணமாக வழக்கு ஜூலை 13உக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

---

## காதல் வெறியால் குத்தினுன்

ஈப்போவைச் சேர்ந்த போத்தா என்ற இடத்தில் வசித்து வந்த ஒரு மலாய்க்காரிக்கு வயது வந்த மகள் ஒருத்தி இருந்தாள். அக்குமரியுடன 14 வயதுடைய மலாய்க்காரன் வெகு நேசமாய் இருந்து வந்தான். இவன் வழக்கம்போல் தனது காதலியைக்காண அவள் வீட்டிற்கு 26ந்திகதி வெள்ளிக்கிழமைவந்தான அவனை ஏகதேசமாய்த் தாய்க்காரி கோபித்துத் தன் மகளுடன் நேசமாய் இருப்பதைக் கண்டித்தாள் அவ்வுரைகளைத் தாங்க மாட்டாது அவ்வாலிபன் தான வைத்திருந்த கிரிசினுல் அவளைக் குத்திவிட்டான். அபாய நிலையில் அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி அவள் சிகிச்சை பெற்று வருகிறுள்.

---

# தட்டாதெருக் கொலைவழக்கு விசாரணை

## எதிரிக்கு 5 வருஷக் கடுங்காவல்

(பிந்திய செய்தி)

யாழ்ப்பாணம்,
திங்கட்கிழமை—

தட்டாதெருக் கொலை வழக்குச் சம்பந்தமாக மீண்டும் இன்று சுப்பிறீம்கோட்டில் விசாரணை நடைபெற்றது. விசாரணையின்பின், ஜூரிகள் எதிரி குற்றவாளியென்ற ஏகமனதாகத் தீர்ப்புக்கூறினர். நீதிபதி எதிரிக்கு 5 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

---

## மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நிகழும் தாது வருடம் ஆனி மீ ௩ ௧ திகதி (24-6-36) புதன் கிழமை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மாணிக்க வாசகசுவாமிகள் குருபூசை மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது. பண்டிதர் சு. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் சுவாமிகளுடைய சரிதத்தையும் அவரது அற்புதச் செயல்களையும் அவரை அறுபான் மும்மை நாயன்மாரோடு சேர்த்துக் கூறாத காரணத்தையும் எடுத்து நன்கு கூறினர்.

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க,
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க,
ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகனனேகன் இறைவனடிவாழ்க

என்னும் சிவபுராண முதலைந்தடிகளுக்கும் கூறிய தத்துவார்த்தமும் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' 'நிறைவொன்புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்............' என்னும் திருக்கோவைச் செய்யுளுக்குக்கூறிய ஞானக்கருத்தும் யாவரையும் இன்பசாகரத்தில் ஆழ்த்தின. ஈற்றில் பண்டிதர் அவர்கள் திருவாசகம் திருக்கோவை யிரண்டும் கரைகாணமுடியாத ஞான சமுத்திரங்களென்றும் சிவஞானச் செல்வர்களுக்கேயன்றி ஏனையோர்க் கெளிதிற் புலனுகா வென்றும் கூறி முடித்தனர்.

மேற்படி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் திருப்பெருந்துறைப் புராணத்தில் சுவாமிகள் முத்திபடைந்ததைப் பற்றிக் கூறும் செய்யுளைப் படித்தபின்னர் சிவபுராண மோதப்படப் பண்டிதரவர்களாலும் ஆசிரியர் க. சோமசுந்தரரவர்களாலும் குறிப்புரை கூறப்பட்டது. பூசை முடிவில் பிரசாதம் வழங்கப்பட்டது.

மணிவாசகன் திருவடிவாழ்க

—சுடிக

---

## வட்டுக்கோட்டை சைவாங்கில கழகத்திற் பெற்றேர் தினம்

நிழும் தாது ஆண்டு ஆனித்திங்கள் 30ம் நாள் (13-7-36) திங்கட்கிழமை பின்னேரம் ஐந்தரை மணி தொடக்கம் வட்டுக்கோட்டை சைவ ஆங்கில கழகத்து மாணவரின் பெற்றேர்தினக் கொண்டாட்டம்" அக் கழகத்தில் நடைபெறும்.

அத்தருணம் கழக அதிபர் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்களுக்கு வேதி கழகத்தின் உபாத்தியாயராலும் பிள்ளைகளாலும் ஓர் உபசாரணை நடாத்தப்படும். உபசாரணைக்குப்பின் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்கள். கூட்டத்தின் பல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அப்பொழுது அன்பர்கள் யாவரும்வந்து கூட்டத்தைச் சிறப்பித்து, பிள்ளைகளையும் கழகத்தையும் ஆசீர்வதித்துப் போகுமாறு வேண்டப்படுகின்றனர்.

—சுடிக.

## விநோதக்கொத்து.

### கிழவர்கள் வேலை

ஷெபீல்டில் ஜோசப் பாமர் என்ற எண்பது வயதுக்கிழவர் இன்னும் டான்ஸ் ஆடுகிறாராம். சார்லஸ் கிங் என்பவர் தமது எண்பத்தைத் தாவது வயதில் காலெயிலும் மாலையிலும் இங்கிலீஷ் கால்வாயில் நீந்தி வந்தாராம். மாடம் சாக்வி யென்ற பிரஞ்சு சர்க்கஸ் மாது 79 வது வயதில் கம்பிமீது நடக்கும் வித்தையைச் செய்தாராம். டான் பிரோ அடுவோ என்பவர் 80 வது வயதில் சர்வகலாசாலையில் பீ. ஏ. வகுப்பில் சேர்ந்துகொண்டாராம். மார்கரட் டோரி யென்ற மாது ஆபிரிக்காவிலுள்ள தனது நண்பர்களைக் காணுமாறு தனது 81 வது வயதில் ஆயிரக்கணக்கான மைல் தூரம் விமானத்திற்பறந்து சென்றாராம். ஸ்ரீமதி விட்டேகர் என்ற மாது 99 வது வயதில் சைக்கிளில் சவாரி செய்தாராம்.

### வால் நட்சத்திரம் வருகிறது

பெல்டியர் வால் நட்சத்திரம் என்ற ஒரு புதிய வால் நட்சத்திரம் இந்த மாத இறுதியில் பூமிக்கருகே வருவதால் அது எல்லோருக்கும் அதிகாலையில் தெரியுமாம். பெல்டியர் என்ற வான சாஸ்திரி இதனை சமீபத்தில் கண்டு பிடித்தாராம். அது இப்பொழுது பூமியிலிருந்து சுமார் இரண்டுகோடி மைல் தூரத்தில் இருக்கிறதாம். 1910ல் தோன்றிய ஹாலி வால் நட்சத்திரத்துக்குப் பின் இதுதான் பூமிக்கருகே தோன்றுகிறதாம்.

### எவ்வளவு காகிதம்

உலகத்தில் செலவாகும் காகிதத்தில் பாதிக்குமேல், ஒருகோடி டன்காகிதம் ஆண்டுதோறும் அமெரிக்காவில் செலவாகிறதாம். ஆண்டு தோறும் உலகமெங்கும் சுமார் இரண்டுகோடி டன் காகிதம் செலவாகிறதாம். இதில் இருபது லட்சம் டன் காகிதம் எழுதுவதற்கும் அறுபதுலட்சம் டன் சாமான் கட்டுவதற்கும் சுமார் ஒருகோடி டன் காகிதம் அச்சுவேலைகளுக்கும் உபயோகமாகிறது.

### நாடில்லாத மக்கள்

மத்ய ஐரோப்பாவில் இரண்டுலட்சத்து இருபதினாயிரம் ஆண்பெண் குழந்தைகள் தங்களுக்கென்று ஒரு நாடில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் குடியேறுவதற்கு ஒரு நிலைத் தங்களுக்குக்கொடுக்க வேண்டுமென்று சர்வதேசசங்கத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் பிரதிநிதிகளான மூவர் புடாபெஸ்டிலிருந்து ஜினோவாவுக்கு நடந்து போனார்கள்.

### பெண் நாவிதர்

காண்டன் நகரில் இரண்டாயிரம் மாதர்களுக்குமேல் க்ஷவரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆண்களைவிட அவர்களுக்கே தொழில் நன்றாக நடக்கிறதாம்.

### பூனை ஹோட்டல்

சீன தேசத்தில ஷாங்கே நகரத்தில் பூனைகளுக்கென்றுருஹோட்டல் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது சுமார்மூவாயிரம் பூனைகளுக்கு காலைமத்தியானச் சாப்பாடுமுதலியவைஹோட்டலிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஹோட்டல்காரர்கள் பூனைகள் இருக்கும் வீடுகளுக்கு ஆகாரத்தைக் கொண்டு போய்க் கொடுத்து வருகிறார்கள்.

### 100 வருஷத்திற் கொரு பூ

பம்பாய் எல்பின்ஸ்டன் தோட்டத்திலுள்ள ஒரு பனை நூறு வருஷத்திற்கு ஒரு தடவைதான் பூக்கிற வழக்கம். அது இப்பொழுது பூத்திருப்பதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அந்த அற்புதத்தைப் போய் பார்த்து வருகிறார்கள்.

### பிச்சைக்காரர்கள் பத்திரிகை

புடா பெஸ்டில் பிச்சைக்காரர்கள் ஒரு தனிப் பத்திரிகை நடத்துகிறார்களாம். ஒரு பிச்சைக்காரர் எழுதுவதை ஒவ்வொருவராகத் திரும்ப எழுதி ஒரு பென்ஸ் வீதம் விற்கிறார்களாம்.

### முசோலினி திகில்

இத்தலி நாட்டுச் சர்வாதிகாரியான முசோலினி எதியோப்பியாவுக்குப் போவதாக யுத்தம் முடிந்தவுடன் ஒரு யோசனை ஏற்பட்டது. முசோலினி அங்கு போனால் அவரைக் கொன்று விடுவதாகப் பதினாயிரக் கணக்கான எத்தோப்பியர் சபதம் செய்திருக்கிறார்களாம், அதனால் அந்த யோசனை நின்றுவிட்டதாம்.

## அரசியல் திருத்த விசாரணைக் குழு

### அரசியல்வாதிகளிடையே அபிப்பிராய பேதம்

கொழும்பு, ஜூலை 9

அரசியல் திருத்தக் கமிஷன் இலங்கைக்கு எதிர்பார்க்கப்பட்ட தினத்திற்கு முன்னதாகவே வரப் போகிறதென ஒரு செய்தி வெளியாயிருந்ததல்லவா? மேற்படி கமிஷன்பற்றி அரசியல் வாதிகளிடையே பல பல அபிப்பிராயபேதங்களிருக்கின்றன. சிலர் இந்தக் கமிஷனால் பெரும் நன்மை ஏற்படுமென்று கூறுகின்றனர். இதனால் மகத்தான கேடுவிளையுமென மிதவாதக் கக்ஷியினர் தெரிவிக்கின்றனர். இந்தக் கமிஷன் விசாரணையினாலும் அதன் சிபார்சுகளினாலும் ஒருவருக்கும் ஒருவித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று சமதர்மவாதிகள் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

ஆனால் சிறுபான்மையினர் கக்ஷியினரில் பெரும்பாலும் புதிய கமிஷனால் தங்களுக்கு ஏதோ மகத்தான நன்மை கிடைத்துவிடுமென எதிர்பார்க்கிறார்கள். மலாய் வகுப்பினரும் சோனகரும் புதிய கமிஷனின் வருகையை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தமிழர் புதிய கமிஷனால் அதிக நன்மை கிடைக்குமென எதிர்பார்க்காது போனாலும் தங்களுக்கு மேற்படி கமிஷன விசாரணையின்போது ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமெனக் கருதுகிறார்கள். டொனமூர் கமிஷன் விசாரணையின்போது தூங்கிக் கொண்டிருந்தமாதிரிஇனித் தமிழர்கள் உறங்கமாட்டார்கள். சிங்களவர்களை நம்பி மோசமபோன வரலாற்றையும் பஹிஷ்காரம் கையாடிய கதையையும் தமிழர் புதிய கமிஷனிடம் விகசிதமாகத் தெரிவிப்பார்களெனக் கூறப்படுகிறது.

இங்குள்ள இந்தியர்கள் நிலைபற்றியும் கமிஷன் விசாரணை செய்யுமெனச் சொல்லப்படுகிறது.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை சன்னினம்பாத்தில்உசக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு,சாலா முஸ்லி, சப்பேமுசலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதப் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விரை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்த பாண்டு. பீனிசம், கைகால்காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டான நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பல முபெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடா அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,<br>
க. ஆறுமுகம்பிள்ளை,<br>
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.<br>
காத்தான்குடி போஸ்டு,<br>
மட்டக்களப்பு<br>
Y46 1-1-36 to 31-12-36) சிலோன்.

## வீ. பீ. (நிக்கலஸ் அன் சன் வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னுபாங்க்" டெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும், உலகத்தில் ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12வீதம் வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலும் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திற்போய் இறக்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசெப்,<br>
மனேஜர்.

(Y. 188, 21.10-35—20-10-36.) த

## பலகையால் அடித்துக் கொன்றான்.

கோலாலம்பூர், ஜொசம், ஜன்சா தோட்டத்தில் தேங்காயெண்ணெய் ஆலையில் வேலை பார்த்து வந்த பெருமாள் தன் தோழருள் கந்தையாவை பிப்ரவரி மாதம் 23 ம் திகதி ஒரு பலகையால் அடித்துக் கொன்றான். இவ்வழக்கில் பெருமாளுக்குத் திங்கட்கிழமை குவாலாலம்பூர் அஸைஸ் கோட்டில் 3 வருடக் கடுங்காவல் விதிக்கப்பட்டது. இதில் பெருமாளும் கந்தையாவும் ஒரே ஆலையில் வேலை பார்க்கும் நண்பர்களென்றும் அன்று அங்கு நடந்த சிறு சண்டையின் காரணமாகப் பெருமாள் கந்தையாவைப் பலகையினால் அடித்தானென்றும் முன்னமேயிருந்தே கந்தையாவைக் கொல்ல வேண்டு மென்ற யோசனை பெருமாளுக்கு இல்லையென்றும் சொன்ன வழக்காளியின் கதை அப்படியே ஒப்புக் கொள்ளப்பட்டது.


நீங்கள் ஒரு சிறு காரை வாங்கும்போது பின்வரும் குறிப்புக்களை அவதானியுங்கள்

ஆஸ்டின் செவினில்

1. 4 ஸ்பீட் கியர் பொக்ஸும் 3 ஸ்பீட்ஸ் சிங்கரமேஷும் உண்டு
2. ஸ்பேயர்வீலும் லக்கேஜ் கரியரும் உண்டு
3. அபாயமின்றிக் காரைச் செலுத்தக்கூடியவிதமாகத் தானே இயங்கும் ரிட்டேன் டிரெக்ஷன் இண்டிக்கேட்டர்ஸ் உண்டு
4. குரோமியம் பிளேட்டுள்ள டிப் அன் சுவிச்ஹெட்லாம்ஸும் ஸ்டொப் லைட்டும் உண்டு
5. ஒளிபொருந்திய இன்ஸ்ட்ருமெண்ட் போனல் உண்டு
6. கீழ்த்தரை லெவல் உண்டு
7. செலவுச் சுருக்கத்திற்கேற்ற பாரக்குறைவு உண்டு

நீங்கள் ஆஸ்டின் காருக்குக் கொடுக்கும் பணம் பழுதற்ற பணமாகும்

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.



நீங்கள் ஆஸ்டின் காருக்குக் கொடுக்கும்பணம் பழுதற்ற பணமாகும்

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்

அதிகாரம் பெற்ற ஏஜென்ஸ்

ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y137. 19-8-35. — 18-8-36

தலைவலியுற்றபோது

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்

தலைவலி யுடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில்

இந் யர்களாலேயே செய்யப்படுவது

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது

Y 44 1-1—31-12-36)

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாராதரப்பத்திர வகுப்பு (1937)

[J.S.C.] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம்,சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக்கும் ஆவசியகம் வேண்டியது. விலை சதம் 80.

செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.

விலை சதம் 75.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.<br>
வண்ணார்பண்ணை,

Mis 12. 13-4-36.) தி

## கொக்குவில் சேவைச் சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் கொக்குவில் கிழக்கில் ஸ்தாபிக்க எண்ணியிருக்கும் சைவத் தமிழ் வித்தியாசாலைக்காக 6-1-36-ல் ஓர் காணி 360) ரூபாவாக வாங்கி இருந்தோம். முன்சேர்த்த பண விபரங்கள் 13-1-36-ல் பிரசுரமான இந்துசாதனத்தில் வெளியிடப்பட்டது. பணம் குறைந்தமையால் ஆறுமாத தவணையில் தீர்ப்பதாகக் காணி 8¼ப் பரப்பும் அறுதி உறுதி முடிப்பதற்கு ரூ 1000/ உடன் வாங்கி இருந்தோம். அக்கடனைத் தவணைக்கிணங்க 6-7-36ல் தீர்த்துப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொண்டோம்.

### பணம் சேர்ந்த விபரம் பின் வருமாறு

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| | 6-1-36 வரை சேர்த்த பணம் (13-1-36 இந்துசாதனப்படி) | | | 1646 | 81 |
| | பொருள்கொடை | | | 150 | 00 |
| | மலாயன்—கொக்குவில் யூனியன் | | | | |
| | திருவாளர்கள்: V. W. தம்பையா | K L | $25 00 | | |
| | ,, S. E. கந்தையா | K L | $15 00 | | |
| | ,, P. அப்பையா | K L | $13 40 | | |
| *25 | ,, K. பொன்னுத்துரை | K L | $10 00 | | |
| | ,, K. சுவாமிநாதன் | K L | $10 00 | | |
| | ,, S. ஆறுமுகம் | K L | $10 00 | | |
| | ,, A. சின்னையா | K L | $5 00 | | |
| | ,, K. கணிகாசலம் | K L | $5 00 | | |
| | ,, V. சிவசம்பு | K L | $5 00 | | |
| | | | $98 40 | 150 | 00 |
| | திருவாளர்கள்: பொ. அப்பாத்துரை (Merchant Kokuvil.) | | | 100 | 00 |
| | ,, செ. அப்புத்துரை ,, | | | 100 | 00 |
| *50 | ,, இ. தம்பையா ,, | | | 50 | 00 |
| | ,, க. அப்பாக்குட்டி ,, | | | 50 | 00 |
| | ,, க. அமிர்தலிங்கம் ,, | | | 50 | 00 |
| *30 | ,, ச. தம்பி (Surveyor) | | | 50 | 00 |
| *27 | ,, ம. நடராசா (P. O. Jaffna) | | | 48 | 00 |
| | ,, மு. கதிரவேலு (F. M. S. Pensioner) | | | 30 | 00 |
| | ,, இ. சிவசுப்பிரமணியம் (Deputy Shroff Hong Hong Bank Co.) | | | 25 | 00 |
| *52 | ,, நா. கந்தையா (Merchant Kokuvil.) | | | 25 | 00 |
| | ,, வே. கந்தையா ,, | | | 25 | 00 |
| | ,, க. அப்பாத்துரை ,, | | | 25 | 00 |
| | ,, சி. முத்துவேலு J. P. Chairman V. C. Kokuvil. | | | 20 | 00 |
| | ,, வ. இராசையா Merchant Kokuvil. | | | 15 | 00 |
| | ,, ச. சபாரத்தினம் Overseer. | | | 11 | 00 |
| *20 | ,, வே. சின்னையா G. P. O. Colombe. | | | 10 | 00 |
| | ,, வ. செல்வத்துரை Merchant Kokuvil. | | | 10 | 00 |
| | ,, க. முருகையா Civil Medical Stores Colombo. | | | 10 | 00 |
| | ,, வே. தம்பு Merchant Kokuvil. | | | 8 | 00 |
| | ,, த. முருகேசு ,, | | | 5 | 00 |
| | ,, இ. நாகலிங்கம் ,, | | | 5 | 00 |
| | ,, ச. கணபதிப்பிள்ளை Kachcheri Jaffna. | | | 5 | 00 |
| | ,, கா. கந்தையா (Merchant Kokuvil) | | | 5 | 00 |
| *20 90 | ,, த. சின்னத்தம்பி Municipality Colombo. | | | 5 | 00 |
| | ,, செ. சந்திரசேகரம்பிள்ளை Pensioner Kokuvil. | | | 5 | 00 |
| | ,, அ. சுந்தரம் F. M. S. Pensioner. | | | 5 | 00 |
| | ,, A. S. நாகலிங்கம் Merchant Kokuvil. | | | 5 | 00 |
| | ,, S. தம்பையா Overseer U. D. C. Jaffna. | | | 2 | 50 |
| | ,, வ. பொன்னையா (Merchant Kokuvil) | | | 2 | 00 |
| | ,, பொ. தரைக்குட்டி ,, | | | 2 | 00 |
| | ,, வீ. இராசா ,, | | | 2 | 00 |
| | ,, இ. செல்வத்துரை ,, | | | 2 | 00 |
| | ,, வை. சின்னத்தம்பி ,, | | | 2 | 00 |
| | ,, மு. நல்லதம்பி ,, | | | 1 | 00 |
| | ஆக மொத்தம் | | | 2662 | 31 |

வியாபாரமந்தம், பண நெருக்கடி முதலியன இருந்தும் எமது கிராமத்தில் வசிக்கும் பெரியோர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை மனமகிழ்ச்சியுடன் ஈந்து, வித்தியாசாலைக்குக் காணி வாங்குவதற்கு என இம் மாபெருந் தொகையைத் திரட்ட ஊக்கமளித்தனர். அவர்கட்கும், பணம் உதவிய ஏனைய நண்பர்கட்கும், பெரியோர்கட்கும் எம் நன்றி உரித்தாகுக!

மலாயன்-கொக்குவில் யூனியன் எமது சங்கத்துப் பாடசாலைக் கட்டிட நிதிக்கென $2320/—வரை எழுத்தில வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். அதில் ஓர்பகுதியும் அனுப்பி இருக்கிறார்கள், கட்டிடவேலை சீக்கிரமாகத் தொடங்கவேண்டியிருப்பதால் எமது சங்கமும், நம் ஊரிற் பெரியோர்களிற் பலரும், மலாய நண்பர்களையே நம்பி இருக்கிறார்கள் நமது மலாய நண்பர்கள் தாங்கள் வாக்குப்பண்ணியிருக்கும் பணத்தைச் சீக்கிரமாக உதவுவதுடன் எமது வேலைகட்குப் போதிய ஊக்கமளித்து ஆசீர்வதிப்பார்களென நம்புகிறோம்,

மலாயன்—கொக்குவில் யூனியன் சகோதரர்கள் யாபேருக்கும் எம் நன்றி உரித்தாகுக!!

* இரண்டாம்முறையும் உதவியவர்கள் முன்கொடுத்த தொகை ரூபா விபரம்.

குறிப்பு: பாடசாலை விஷயமாகப் பணம் அனுப்ப விரும்புவோர் சங்கத் தனாதிகாரிக்குப் பின் வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

R. Thambithurai Esq.
G. P. O.
Colombe.

இப்படிக்கு
ம. நடராசா,
காரியதரிசி, கொக்குவில் சேவைச் சங்கம்.

(Mis. 75· 13-7-36.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் கொக்குவில்மேற்கு ஆறுபிள்ளை குட்டித்தம்பியிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல | திகதி | ரூபா-சதம். | பெயர் ஊர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 1634 | 22-12-34 | 8 | தம்பிப்பிள்ளை சங்கரப்பிள்ளை கொக்குவில் கிழக்கு ஒப்பில் காதோலை சோடி 1 |
| 1947 | 4-3-35 | 19 | சுந்தரம் பொன்னுத்துரை கொக்குவில் மேற்கு பொன் அச்சரக் கூடு 2. |
| 1995 | 13-3-35 | 22 | சுந்தரம் பொன்னுத்துரை ,, ,, பொன் அச்சரக் கூடு 2 |
| 2132 | 13-4-35 | 15 | சின்னையா வேலாயுதபிள்ளை கொக்குவில் கிழக்கு ஒப்பின் புரோச்சு 1. |
| 2196 | 24-4-35 | 90. | கதிரவேலு பதஞ்சலம் கொக்குவில்கிழக்கு அச்சக்காப்பு சோடி 2 |
| 2307 | 16-5-35 | 7 | ஐயம்பிள்ளை சின்னத்தம்பி கொக்குவில் குளப்பிட்டி பதக்கமிடம்பியுடன் 1 |
| 2410 | 8-6-35 | 125 | ச. வல்லிபுரம்பெண் காகம்மா கொக்குவில் கிழக்கு செட்டிப்பூரான் அட்டியல் பதக்கம் உட்பட 1. |
| 2411 | 8-6-35 | 70 | ச. வல்லிபுரம் பெண் காகம்மாகொக்குவில்கிழக்குபெரியஒப்பின. பதக்கம் 1. |
| 2415 | 9-6-35 | 17 | இராமு தாமோதரம்பிள்ளை கொக்குவில் கிழக்கு அச்சரக் கூடு 1 மோதிரம் 2. |
| 2478 | 26-6-35 | 23 50 | ஆறுமுகம் கனகரத்தினம் கொக்குவில் கிழக்கு குண்டு வைத்த அரைப்பவுண் 2 கலாவரை மோதிரம் 1 |
| 2482 | 26-6-35 | 15 | சில்லோதர்செல்லையாவண் மேற்குநீலக்கல்மோதிரம் 1 காதுக்குச்சி 1 |
| 2504 | 1-7-35 | 6 | சுந்தரம் பொன்னுத்துரை கொக்குவில் மேற்கு ஒப்பின் காதோலை சோடி 1 |
| 2562 | 13-7-35 | 18 23 | சுப்பிரமணியம் பொன்னுத்துரை கொக்குவில் குளப்பிட்டி நீலக்கல்மோதிரம் 1. |

விற்பனவு:— தாதுவருஷம் ஆடி மீ 7-ந் திகதிக்குச் சரியான 1936 ம் ஆ. யூலை மீ 22-ந் திகதி காலை 10 மணிக்கு எடுக்கப்பட்டவைக பிற கீழ்கலாக மிகுதி மேற் சொல்லப்பட்ட அடைவு பிடிப்பவர் வீட்டில் விற்பனவு நடைபெறும்.

M. சிவசிதம்பரம்பிள்ளை உடையார்
வெத்திஸ் மேன்தர் கொக்குவில்.

Mis 74. 9 & 13 - 7 - 36.

## வெண்பாவில் புகழேந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரமதியும் அரிச்சந்திரன் "வழுநின் என்றும் நீ வழிபடு தெய்வத்தை வணங்கி கிழக்கு நோக்கிநிரு" எனக் கூறப் "பழக்கமான அக்கணவனைப் பாவி" யிருந்தனள். கண்ணகி கோவலனை இழந்த காலத்தும் ஒரு கடவுளரையும் வணங்கிலள் மற்றது, கற்பாசிகளிடத்துத் தம் குலத்தை விளக்கும் தன்மையையும் தம்மொடு நெறிமுறையா னொழுகாதாரை எரித்தழிக்கும் தன்மையையும் எற்றி அத்தன்மைகள் மிக்களரியுடன் அவர்களைப் பொருத்திக் கூறல் நல்லிசைப் புலவர்களது தலைசிறந்த செயலாகும் என்பதைக் கம்பர், புகழேந்தியார் அதிவீரராம பாண்டியன், இளங்கோவடிகள். முதலிய பெரும் புலவர்களது நூல்களை நன்கு திருத்தமுற ஒப்பிட்டுக் கற்ற நற்றமிழ் அறிஞர்கள் உரைக்கின்றனர்.

கம்பர் சீதாபிராட்டியாரை "வினையுடை யாக்கைமீ நந்தை வெந்துகச் சனகிவென் றொருதழல் நடுவட்டக் கலான் அனகன் கையப்பெறு மளவிலுதையால் கனக நீடிலங்கை நின்றுருகக் காண்டியால்"

எனுஞ் செய்யுளில் தழலாக உருவகித்தனர்.

தமயந்தியை நற்புலவர் திலகர் அழைக்குமிடங்களில் "வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம்" "குலவிளக்கு" என எரியின் தன்மையுடையவராக அழைத்தனர். இளங்கோவடிகளும் பத்தினிக்கடவுளைக் குறித்தபொழுது "தீணிலவிளக்கே" என்றார்.

கற்பாசிகள் முற்கூறிய எரியின் தன்மைகள் இரண்டையும் ஒருங்கே உடையார்களென்பதைப் புலவர்கள் கூற்றானன்றிக் கற்பரசிகளின் கூற்றினும் செயல்களாலும் நன்கறியலாம்.

சீதாபிராட்டியார் "எல்லை நீத்த உலகங்கள்யாவும் என் சொல்லினாற் சுடுவன்" என்றார். "பைக்தொடி நீ என்னுடன் போதுவாய்" என்று அழைத்தவேடனை தமயந்தி சீறி விழித்து நோக்கினாள். இதனைக் குறிக்கும் பொழுது அதிவீரராம பாண்டியர் "கற்பின் அழல் கொடுஞ் சிலைக்கை வேடனுடலங் கரியாக்கி" என்றார். பொங்கு நீர் ஞாலத்தைப் புன்னெறியில்லாக்கு மிருங்கவியுப் தமயந்தி தீபமாய்—விளக்காய்—எரியாய்—கற்பின் அழலை உடையவளாய் இருந்தாளாகையாற்றான். அவனைச் சேராது நின்றான் கண்ணகி மதுரையை எரித்தழித்தார் இதனை "முதிரா முலைமுகத் தெழுந்த தீயின மதுரை மூதூர் மாநகர் சுட்டதுப்" என்றனர் இளங்கோவடிகள். சாவித்திரியும் யமனுடன் தென்திசை சென்றகாலை அக்கினியாறதையுங் கடந்து சென்றார் என்பர். திரௌபதி எரியிடைப் பிறந்தார். இதனாலும் கூறியவற்றான் முற்கூறியாங்கு கற்பரசிகள் எரியின் இரு தன்மைகளை உடையாரென்பதும். அவர்களைப்பற்றிக் கூறியபுலவர்களும் அவர்கள் அவ்விருதன்மைகளையுமுடையார்களெனபதைப் புலப்பட வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொறித்துளரென்பதும் வெளிப்படை. இவற்றை யின்னும் விரித்துப் புலவர்களின் செய்யுளகளுக்குத் ததிபாகமாகவேயன்றி நாளிகேரபாகமாகவும் பொருள் உரைக்கப் புகின் மிகவிரியுமாதலின விடுக்குதும். (தொடரும்)

## தெகிவலை மிருகக் காட்சி

### சென்ற புதன்கிழமை முதலாவது கூட்டம்

கொழும்பு, ஜூலை 9—

சமீபத்தில் அரசாங்கத்தார் விலைக்கு வாங்கியுள்ள தெகிவலை மிருகக் காட்சிச் சாலையை நிர்வகிக்க ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டதல்லவா? இக் கமிட்டியின் முதல் கூட்டம் நேற்றுக் காலையில் கொழும்புக் கச்சேரியில் நடைபெற்றது. மேற்கு மாகாண அரசாங்க ஏஜண்டு திரு. ஆர். ஏம எம். வொர்ஸ்லி இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கமிட்டியின் காரியதரிசி திரு. ஏ. லே. வெண்மன். இக் கமிட்டியில் மொத்தம் 20 அங்கத்தினர்கள் உண்டு

## சைவ பரிபாலன சபை.

(6-7-36ன் தொடர்)

### இந்துக்கல்லூரிப் பரீக்ஷை

"The results of the last annual grant-in-aid examination are satisfactory 288 out of 375 presented, or 76·8 per-cent passed the Inspectors examination. Four candidates took up the Cambridge Junior Local and six the Cambridge Senior Local Examination in December 1910. Five Candidates have sent in applications for the June Matriculation examination of the London University. Of the four candidates who took up the Cambridge Junior Local the following 3 boys have passed:—A. R. Shanmukam, V. Chinnadurai, and S. Chinnatamby, and of the six who took up the Senior, the following five have passed:—K. Kandiah (with distinction in Logic) V. N. Chelvadurai, C. Mailvahanam, A. Nadaraja and S. Subramaniyam".

### கட்டடம்

"There was a great deal of construction work carried out during the past year. The upper floors of the northern southern wings of the College were planked and the higher classes were moved into them. The main hall of the College was provided with in wooden ceiling. The dining hall and kitchen of the Boarding House were also completed. A row of five additional class-rooms is being put up in the southern part of the College premises under the supervision of Mr. C. W. ChinnappaPillai, and and will be ready for occupation when the College reopens in May after the New Year vacation. The front work of the College is also being pushed under the supervision of Mr. M. Sanmukam, and when it is completed the College will have an elegant and imposing front view from the road. A suitable building for the phisical and chemical laboratory is urgently required, and the Board of Directors has resolved to put up a two storied building at a cost of about Rs 6,000 between the main building and the well in the northern part of the College premises. The plan and estimates have been already approved by the Board and the constructian work will be taken up shortly"

### வாசகசாலை

"About 300 volumes were added to the library during the past year and there are now about 750 books in the library. The College faculity has taken over the Victoria Reading Hall which is still open to any gentleman outside the College who pays a monthly subscription of 50 cents".

### Science Laboratory

"It is the intention of the College authorities to have a good laboratory fitted with the apparatus necessary for the teaching of Physics and Chemistry. Valuable additions were made last year to our stock of scientific apparatus, and we have now apparatus and chemicals worth more than Rs. 2,000. The teaching of Science is being carried on in one of the rooms temporarily fitted up as a laboratory by the new professor. A sum of Rs. 4000 more has to be spent in order to make our stock of apparatus sufficient for the immediate needs of the College'

### இனிப் பள்ளிக்கூடங்கள்

"The management of the Tirugnana Sambandha Murti Nayanar Vidyasalai, started about 20 years ago by Mr M. Sayampu in the island of Karativoe, was handed over to the Board of Directors of the Jaffna Hindu College in May, 1910 Mr. E. K. Sivasubrahmanya Aiyar, B. A., took charge of it as Headmaster in July, 1910, and the old boys and friends of the school in the Federated Malay States are monthly contributing to the school a sum sufficient for the maintenance of its headmaster. The Manager, Hindu College, has applied to the Department of Public Instruction for its registration as a grant-in-aid institution.

The Hindu Anglo-Vernacular School, Kankesanturai, has been taken ovsr as a feeder school by the Board of Directors from the commencement of March 1910. This school requires considerable improvements to be made, and it is to be hoped that the residents of Tellipalai division will render sufficient financial help to the College authorities in order to enable them to make the school at Kankesanturai an efficient educational institution.

Mr. T. K. Ayadurai, an old boy, was given a studentship last year out of the income arising from the funds generously given to the College by the late T. Nagalinga Mudaliar of Pt. Pedro. He is preparing for the IntermediateExam-ination inArts at theChristianCollege Madras. Mr. Manikkavasagar, another old boy, has been selected by the Board of Directors to be sent to Madras next July in order to take up the B. A. course in one of the Madras Colleges. These young men will serve the College as teachers after completing there courses in Madras."

### Urumpiray Hindu English Schools.

"At the requst of the people of Urumpiray, an English School was opened there in April 1911. Mr. Veluppillai has given a piece of land on the Jaffna-Palali road for the School, and the people are putting up a building on this land. The new School is teaching up to the 7th standard of the Government grant-in-aid code. There are over 90 boys on the roll of the school and new admissions are being made daily. Mr. M Chinniah, a trained teacher holding a first class certificate is in charge of the school as its Headmaster. This school, on account of its central position, is soon bound to rise to a positions of importance among the educational institutions of Jaffna, and the college authorities should be helped liberally by the people of the place to make the school an efficient educational institution. The college has to spend nearly Rs. 100 per month for the maintenance of this school as present"

### Kokuvil Hindu Engish School

"The inauguration ceremony of the new building on the Jaffna - Kankesanturai road took place on Thursday the 8th June 1911. This school is being conducted at present as a primary school. Mr. K. Karthigesu, teacher of one of the divisions of the first standard in the College, has joined the staff of this school."

(தொடரும்)

# இலங்கையில் நெய்யப்பெற்ற சீலைகள்

## வெள்ளவத்தை மில்லில் தயாரிக்கப்பட்டவை

ஓவ்வொருவீட்டிலும் நன்கு அறியப்பட்டவை என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம்

இவை நன்ருக உடைதாங்கக்கூடியவை; பார்வைக்கு மிக அழகானவை; மிக மலிவானவை;

உங்கள் வியாபாரிகளிடம் **இச்சீலைகளையே** தரும்படி வற்புறுத்துங்கள்!

உத்தரவாதம்பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரைச் சேலைகள் வேற்று நாடுகளிலிருந்து இங்கு சேலைகளை இறக்குமதி செய்விக்கும் எவருக்கும் பொருமையை விளைப்பனவாகும்.

உத்தரவாதம் பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரை வேட்டிகளும் சால்வைகளும் அவற்றை உபயோகிப்போருக்குப் பெருமையை அளிப்பனவாகும்.

சில்லறைவியாபாரக்கடை, பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்

முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்



# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடி, பித்த பிரசினைக்குஞ் சீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை, சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் செட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிருர்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வார்த்துதிரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற சிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னுண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332, 20-3-36 to 19-9-36)



## "NEW ERA SERIES" OF School Text Books

பாடசாலைகளுக்குரிய புதிய தமிழ் நூல்கள்

செந்தமிழ்க் கருவூலம் (1—3)
கதாவாசகம்
முதலியன.

அரசினர் தவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
Hd. Master (Ag.)
R. S. School,
Saintbamaruthu.
இயற்றியவை.
விரைவில் வெளிவரும்.
(Q. 22. 1-5-36—31-7-36) இ


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் கேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


# சிவன் வேம்புத் தைலம்

செம்மேகம், கருமேகப் பத்தக்கள், குஷ்டம், குஷ்டரோகம், அரிப்பு, தடிப்பு, கிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், கக்கூஸ்பத்தக்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய ரூலை ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பதது, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம். 12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.
நோதெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக்கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, க்ஷயரோகம், சுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சொட் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீரூறல், இனிப்புத் தோன்றல், மறுமந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணப்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்து வருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தர்காற்றல், காஷ்டவருத இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹீம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அனுபானம், தாளிசபத்திரி சூரணம் உட்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:—வெளிநாட்டினேண்பர்கள் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும், கேட்லாக்கிலும்

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
Q 19. 27-4 to 26-7-36) இ (PALNI. S. I.)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, July 13th 1936,